# சேலம் மாநகராட்சி

## 2025 - 2026

## வரவு - செலவுத் திட்டம்



# முத்தமிழறிஞர்

# டாக்டர். கலைஞர் அவர்கள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்



மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்

திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள்



மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்

திரு. **கே.என். நேரு** அவர்கள்



மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்

திரு. **இரா.இராஜேந்திரன்** அவர்கள்

# சேலம் மாநகராட்சி



**திரு. ஆ. இராமச்சந்திரன்**
மாண்புமிகு மேயர்



**திருமதி. மா. சாரதாதேவி**
துணைமேயர்



**திரு. K.பாலசுப்ரமணியன், எம்.ஏ.,**
ஆணையாளர் (பொ)
மற்றும்
துணை ஆணையாளர்

# வார்டுகுழுத் தலைவர்கள்



திரு. சே.த. கலையமுதன்
வார்டுகுழுத் தலைவர்
மண்டலம் - 1



திருமதி. செ. உமாராணி
வார்டுகுழுத் தலைவர்
மண்டலம் - 2



திரு. த. தனசேகர்
வார்டுகுழுத் தலைவர்
மண்டலம் - 3



திரு. மா. அசோகன்
வார்டுகுழுத் தலைவர்
மண்டலம் - 4

# நியமனக்குழு உறுப்பினர் - நிலைக்குழு தலைவர்கள்



**திரு. ஆ. தமிழரசன்**
நியமனக்குழு உறுப்பினர்



**திருமதி. கோ. மஞ்சுளா**
கணக்கு நிலைக்குழு தலைவர்



**திரு. பெ. முருகன்**
கல்வி நிலைக்குழு தலைவர்



**திரு. அ.ச. சரவணன்**
சுகாதார நிலைக்குழு தலைவர்



**திரு.கோ. குமரவேல்**
வரி மற்றும் நிதி நிலைக்குழு தலைவர்



**திரு. ஜெ. ஜெயக்குமார்**
நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தலைவர்



**திரு. ரா. சாந்தமூர்த்தி**
பணிகள் நிலைக்குழு தலைவர்

## மாமன்ற உறுப்பினர்கள்



திரு. சி. பன்னீர்செல்வம்
கோட்டம் - 2



திருமதி. சே. மகேஸ்வரி
கோட்டம் - 4



திருமதி. த. தனலட்சுமி
கோட்டம் - 5



திரு. எம். மூர்த்தி
கோட்டம் - 8



திரு. வெ. தெய்வலிங்கம்
கோட்டம் - 9



திருமதி. ரா. சாந்தி
கோட்டம் - 10



திருமதி. தே. இந்துஜா
கோட்டம் - 11



திருமதி. இரா. சங்கீதா
கோட்டம் - 12



திரு. மா.ஸ்ரீ. ராஜ்குமார்
கோட்டம் - 13



திருமதி. கோ.கு.ம. வசந்தா
கோட்டம் - 16



திருமதி. தி.ராஜேஸ்வரி
கோட்டம் - 17



திரு. ஆ. சரவணன்
கோட்டம் - 18



திருமதி. எஸ். தேன்மொழி
கோட்டம் - 19



திரு. பொ. பிரதீப்
கோட்டம் - 20



திரு. வெ. ஜனார்த்தனன்
கோட்டம் - 21



திரு. கே.சி. செல்வராஜ்
கோட்டம் - 22

## மாமன்ற உறுப்பினர்கள்



திருமதி. அ. சிவகாமி
கோட்டம் - 23



திருமதி. கி. சந்திரா
கோட்டம் - 24



திருமதி. மா. சசிகலா
கோட்டம் - 25



திருமதி. கு. சவிதா
கோட்டம் - 27



திருமதி. கு. கிரிஜா
கோட்டம் - 29



திருமதி. ர. அம்சா
கோட்டம் - 30



திரு. எஸ்.ஏ. சையத்மூசா
கோட்டம் - 31



திருமதி. க. பௌமிகா தப்சிரா
கோட்டம் - 32



திருமதி. பு.சீ.ஜெயஸ்ரீ
கோட்டம் - 33



திரு. து. இளங்கோ
கோட்டம் - 34



திருமதி. மா. பச்சியம்மாள்
கோட்டம் - 35



திரு. நா. யாதவமூர்த்தி
கோட்டம் - 36



திரு. மா. திருஞானம்
கோட்டம் - 37



திருமதி. மா. ஜெயந்தி
கோட்டம் - 39



திருமதி. எஸ். பூங்கொடி
கோட்டம் - 41



திருமதி. க.மு. மஞ்சுளா
கோட்டம் - 42

## மாமன்ற உறுப்பினர்கள்



**திரு. எம். குணசேகரன்**
கோட்டம் - 43



**திரு. மு. இமயவர்மன்**
கோட்டம் - 44



**திருமதி. செ. சுகாசினி**
கோட்டம் - 45



**திருமதி. ஜெ. மோகனப்பிரியா**
கோட்டம் - 46



**திருமதி. எஸ். புனிதா**
கோட்டம் - 47



**திருமதி. ரா. விஜயா**
கோட்டம் - 48



**திருமதி. எஸ். மோகனப்பிரியா**
கோட்டம் - 49



**திரு. ந. பழனிசாமி**
கோட்டம் - 50



**திரு. பி.எல். பழனிசாமி**
கோட்டம் - 51



**திருமதி. எஸ். ஷாதாஜ்**
கோட்டம் - 53



**திருமதி. க. கனிமொழி**
கோட்டம் - 54



**திருமதி. எஸ். தனலட்சுமி**
கோட்டம் - 55



**திரு. மா. சீனிவாசன்**
கோட்டம் - 57



**திரு. ரா. கோபால்**
கோட்டம் - 58



**திரு. செ.ஆ. வரதராஜ்**
கோட்டம் - 60



**திரு. ஆ.இராமச்சந்திரன்**
**மாண்புமிகு மேயர்**

## முகவுரை

வணக்கம்,

**வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்**
**கோனோக்கி வாழுங் குடி.**

**உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு மழை தேவைப்படுவது போல ஒரு நாட்டின் குடிமக்கள் வாழ்வதற்கு நல்லாட்சி தேவைப்படுகிறது.**

அதுபோல், தமிழ்நாட்டை நமது **முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்கள்** எந்த துறையானாலும் தனி கவனம் செலுத்தி மக்களுக்கான பல நல்ல திட்டங்களை தீட்டி இரவு பகல் என பாராமல் புதிய யுத்திகளை கையாண்டு மக்களுக்கு சென்று சேரும் வகையில் கவனமாக செயல்படுத்தி வருகிறார்.

அதில் சேலம் மாநகராட்சிக்கு பெருமை சேர்க்கும் வகையில் கடந்த மூன்று ஆண்டுகளாக சேலம் மக்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு, நலத்திட்ட உதவிகள், பள்ளிகளுக்கென தனிகவனம் செலுத்தி கட்டிடங்கள், பள்ளிக்கு தேவையான உபகரணங்கள், மருத்துவத்திற்கு மக்கள் வசிக்கும் அருகாமையிலேயே மருத்துவ கட்டிடங்கள் மேலும் மக்களை தேடி மருத்துவம் என மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சாலைவசதி, தெருவிளக்கு, குடிநீர் போன்ற மக்கள் தேவைகளுக்கென நிதி ஒதுக்கி செயல்படுத்தி வருகிறார்கள். **மாண்புமிகு முதல்வருக்கு உறுதுணையாக மாண்புமிகு துணை முதல்வர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களும், மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு அவர்களும், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்களும்** சேலம் மக்களுக்காக உழைத்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு நன்றி தெரிவித்து சேலம் மாநகராட்சியின் **2025–26** ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கையை தாக்கல் செய்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

சென்ற ஆண்டு வரவு செலவு திட்டத்தில் அறிவித்த பெரும்பாலான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சில பணிகள் நடைபெற்று வருகிறது என்பதில் பெருமிதம் கொள்கிறேன். கடந்த ஆண்டில் ரூ.38.55 கோடிக்கு சாலைகள் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளது. அதேபோல் வடிகால் பணிகள் ரூ.11.07 கோடியும், கட்டிட பணிகள் ரூ.9.60 கோடி மதிப்பீட்டிலும் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் பணிகளுக்கு ரூ.758.13 கோடியும் மற்ற இதர பணிகள் ரூ.70.07 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் சில திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

சேலம் மாநகர மக்கள் பயன்பெறும் வகையில் 2025–26 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது. அதை செயல்படுத்தி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வரும்போது இம்மாநகரம் பெரும் வளர்ச்சி பெற்று தமிழ்நாட்டின் முன்னோடி நகரமாக மாறும்.

உழைப்பிற்கு உதாரணமாக இருந்து தமிழ்நாட்டு மக்களுக்காக எந்த நேரமும் உழைத்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழியை பின்பற்றி சேலம் மாநகராட்சி பகுதி மக்களின் நல்வாழ்விற்காக ஒவ்வொரு நாளும் உழைத்துக் கொண்டே இருப்பேன். இதற்கு உறுதுணையாக இருக்கும் எனது சகோதர சகோதரிகளான மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும், திட்டங்களுக்கு செயல்வடிவம் கொடுக்கும் மதிப்பிற்குரிய ஆணையாளர் மற்றும் அனைத்து நிலை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.



**ஆ.இராமச்சந்திரன்**
**மாண்புமிகு மேயர்**



**திரு. K.பாலசுப்ரமணியன்,எம்.ஏ.,**
**ஆணையாளர் (பொ)**
**மற்றும் துணை ஆணையாளர்**

## முகவுரை

**இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு** - குறள்

**முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசுக் கருவூலத்திற்கு வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுக்காத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.**

சேலம் மாநகராட்சியின் நிதி ஆதாரத்தினை பெருக்கிட வருகின்ற **2025–2026** ஆம் ஆண்டில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு சொத்து வரி, காலியிட வரி, தொழில் உரிமைக் கட்டணம், வரியில்லா இனங்கள், குத்தகை வசூல், குடிநீர் கட்டணம் மற்றும் வருவாய் தரக்கூடிய பிற இனங்கள் மூலம் கூடுதல் வருவாயினை ஈட்டவும் பொது நிதியினை சீரான முறையில் கையாண்டு திட்டமிட்டு செலவிட்டு மாநகராட்சியின் நிதி நிலையினை மேம்படுத்தி திறமையாக நிர்வகித்திட தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக தமிழ்நாட்டை அனைத்து துறைகளிலும் இந்தியாவின் முன்னோடி மாநிலமாக மாற்ற அயராது பணியாற்றி வரும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் சீரிய தலைமையில், **மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்** அவர்களுக்கும், தொடர்ந்து பல்வேறு அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் வழங்குகின்ற **மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்** அவர்களுக்கும், **மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்** அவர்களுக்கும் சேலம் மாநகர தந்தை **மாண்புமிகு மேயர்** அவர்களின் வழிகாட்டுதலின்படியும், சேலம் மாநகராட்சியில் **2025–2026** ஆம் ஆண்டில் அறிவிக்கப்படவுள்ள பெரும்பாலான திட்டப் பணிகளை முழுமையாக நிறைவேற்றிட வரவு–செலவு திட்டத்தினை முன்மொழிவதில் பெருமை அடைகிறேன்.

சேலம் மாநகர பொது மக்களின் அடிப்படை வசதிகளான குடிநீர், சுகாதார வசதி, சாலை வசதிகள், மழைநீர் வடிகால், தெரு விளக்குகள், கழிப்பிடங்கள், ஓடைகள் தூர் வாருதல் மற்றும் பள்ளிகளின் உட்கட்டமைப்பினை மேம்படுத்திடவும், மேலும், அனைத்து வளர்ச்சித் திட்டங்களையும் நிறைவேற்றவும், பொது மக்களின் அத்தியாவசியத் தேவைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்திட இந்த மாபெரும் பொறுப்பையும் கடமையையும் கொடுத்து எனக்கு வாய்ப்பளித்த அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

**K.பாலசுப்ரமணியன்,**
**ஆணையாளர் (பொ)**
**மற்றும் துணை ஆணையாளர்**

# சேலம் மாநகராட்சி

## மாண்புமிகு மேயர்

## திரு. ஆ. இராமச்சந்திரன் அவர்களின்

## 2025 - 2026 ஆம் ஆண்டிற்கான

## நிதி நிலை அறிக்கை மீதான உரை

## பொருளடக்கம்


| வ. எண். | விபரம் | பக்கம் எண். |
|---|---|---|
| 1. | பொது விவரங்கள் | 1 – 19 |
| 2. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் | 20 – 28 |
| 3. | மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களின் 2022–23 ஆம் ஆண்டின் மானிய கோரிக்கை அறிவிப்புகள் | 28 – 30 |
| 4. | பொறியியல் பிரிவு | 31 – 57 |
| 5. | பொது சுகாதாரம் | 58 – 77 |
| 6. | நகரமைப்பு திட்டப் பிரிவு | 78 – 79 |
| 7. | வருவாய் பிரிவு | 80 – 81 |
| 8. | கணக்கு பிரிவு | 82 – 113 |
| 9. | 2025 – 2026 ஆம் ஆண்டு புதிய திட்ட அறிவிப்புகள் | 114 – 115 |
| 10. | முடிவுரை | 116 – 117 |

## சேலம் மாநகராட்சி
## பொது விபரங்கள்

| | | |
|---|---|---|
| 1. | சேலம் மாநகராட்சியின் பரப்பளவு | 91.34 ச.கி.மீ |
| 2. | மக்கட் தொகை (2011 கணக்கெடுப்பின்படி) | 8,29,267 |
| | அரசாணை எண். 152, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 20.10.2022-ன் படி | 10,83,625 |
| 3. | மொத்த கோட்டங்கள் | 60 |
| 4. | வார்டு அலுவலகங்கள் | 4 |
| 5. | சூரமங்கலம் வார்டு அலுவலக கோட்டங்கள் – 14 | 1, 2, 3, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28 |
| 6. | அஸ்தம்பட்டி வார்டு அலுவலக கோட்டங்கள் – 14 | 4, 5, 6, 7, 8, 12, 13, 14, 15, 16, 17, 29, 30, 31 |
| 7. | அம்மாப்பேட்டை வார்டு அலுவலக கோட்டங்கள் – 16 | 9, 10, 11, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43,44 |
| 8. | கொண்டலாம்பட்டி வார்டு அலுவலக கோட்டங்கள் –16 | 45 முதல் 60 வரை |
| 9. | மொத்த சொத்து வரி விதிப்புகள் | 2,12,261 |
| 10. | மொத்த குடிநீர் இணைப்புகள் | 1,18,004 |
| 11. | மாநகராட்சியால் பராமரிக்கப்படும் சாலையின் நீளம் | 1037.173 கி.மீ |
| 12. | தார் சாலை | 842.017கி.மீ |
| 13. | கான்கிரீட் சாலை | 114.947 கி.மீ. |
| 14. | பேவர் தளம் | 43.351கி.மீ |
| 15. | மண் சாலை | 36.858கி.மீ |
| 16. | மொத்த தெரு விளக்குகள் | 43986 |
| 17. | மாநகராட்சி பள்ளிகள் | 96 |

## சேலம் மாநகராட்சி நகர வரைபடம்
## (CITY MAP)



## சேலம் மாநகராட்சி

### மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.12.2021 ஆம் தேதியன்று சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் சேலம் மாவட்டத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு முக்கிய திட்டங்களை அறிவித்துள்ளார்.

**அதன்படி சேலம் மாநகராட்சியில் பாதாளச் சாக்கடை வசதி இல்லாத பகுதிகளில் 530 கோடி ரூபாய் செலவில், 520 கிலோ மீட்டர் நீளத்திற்கு பாதாளச் சாக்கடை அமைக்கும் பணிகளும், கழிவுநீர் உந்து நிலையங்கள், சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணிகளை** அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை அரசாணை எண்.125, நாள்: 09.09.2022–ல் ரூ.548.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி இப்பணிக்கு திட்ட மதிப்பீட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு, 16.11.2023 ஆம் தேதியன்று 4 சிப்பங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டு, பணி ஆணை வழங்கி பணிகள் நடைபெற்று வருகிறது. இதற்காக நாளது தேதியில் ரூ.21.19 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**மாநகராட்சிப் பகுதிகளில் தங்குதடையின்றி குடிநீர் கிடைக்கும் வகையில் 158 கோடி ரூபாய் செலவில் கூடுதல் குடிநீர் வழங்கும் பணிகள் மேற்கொள்ள**

குடிநீர் விநியோக மேம்பாடு திட்ட (WSIS) பிரேரணை மதிப்பீடு ரூ.693.49 கோடிக்கு தயார் செய்யப்பட்டு, 27.06.2022 ஆம் தேதியன்று நடைபெற்ற உயர் மட்ட குழுவில் அனுமதி பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து Transaction Advisor நியமிப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி 29.09.2022 அன்று கோரப்பட்டு, M/S. Infra-En (India) Pvt.Ltd, நிறுவனத்திற்கு திட்ட பரிவர்த்தனை ஆலோசகரை (Transaction Advisor) நியமனம் செய்யப்பட்டு, புதிய குடிநீர் இணைப்பு விரிவாக்கம் சமந்தமாக தகுதிக்கான கோரிக்கையினை (Request for Qualification) TNIDB, Chennai அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் தொடர்பாக 03.01.2024 ஆம் தேதியன்று சென்னையில் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் மாநில அளவிலான உயர்மட்ட நிலைக் குழு கூட்டத்தில் மொத்தம் மதிப்பீடு தொகை ரூ.758.13 கோடிக்கு இத்திட்டம் இறுதியாக்கம் செய்யப்பட்டு, 07.03.2025ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**சேலத்தில் உள்ள போடிநாயக்கன்பட்டி ஏரி, மூக்கனேரி மற்றும் அல்லிக்குட்டை ஏரி போன்ற நீர்நிலைகளை மேம்படுத்துவதற்கான பணிகள் ரூபாய் 69.00 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.**

**போடிநாயக்கன்பட்டி ஏரி :**

சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட போடிநாயக்கன்பட்டி ஏரியை Landtech AEPC Private limited, Chennai நிறுவனம் மூலம் ரூ.19.00 கோடிக்கு திருத்திய விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசுக்கு சமர்பிக்கப்பட்டு 31.12.2022 ஆம் தேதியன்று அரசு உயர் மட்ட குழுவில் ஒப்புதல் பெற்று, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம் சி7) துறை, அரசாணை எண்: (3டி) 1, நாள்: 4.3.2023 இன்படி உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் திட்டத்தின் (I & A) கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.



இதற்காக 12.05.2023 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி பெற்று, 05.06.2023 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டு, 11.06.2023 ஆம் தேதியன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு நாளது தேதி வரையில் 83 சதவிகித பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது, இப்பணிக்காக இதுவரை ரூ.8.74 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**மூக்கனேரி :**

அஸ்தம்பட்டி வார்டு அலுவலத்திற்கு உட்பட்ட மூக்கனேரியை மேம்படுத்துவதற்காக Edecons Consultants, Bangalore நிறுவனத்தினரை திட்ட ஆலோசராக நியமனம் செய்யப்பட்டு, மதிப்பீடு தொகை ரூ.23.00 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசுக்கு சமர்பிக்கப்பட்டு 31.12.2022 ஆம் தேதியன்று அரசு உயர் மட்ட குழுவில் ஒப்புதல் பெற்று, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம் சி7) துறை, அரசாணை எண்: (3டி) 1, நாள்: 4.3.2023 இன்படி உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் திட்டத்தின் (I & A) கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.







இப்பணிக்காக 12.05.2023 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி பெற்று, 05.06.2023 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டு, 11.06.2023 ஆம் தேதியன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, நாளது தேதி வரையில் 75 சதவிகித பணிகள் முடிக்கப்பட்டுள்ளது, மீதமுள்ள பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது, இப்பணிக்காக இதுவரை ரூ.12.70 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**அல்லிக்குட்டை ஏரி:**

அம்மாபேட்டை வார்டு அலுவலத்திற்குட்பட்ட அல்லிகுட்டை ஏரியை மேம்படுத்துவதற்கு Edecons Consultants, Bangalore நிறுவனத்தினரை திட்ட ஆலோசராக நியமனம் செய்யப்பட்டு திட்ட மதிப்பீடு தொகை ரூ.10.00 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசுக்கு சமர்பிக்கப்பட்டு 31.12.2022 ஆம் தேதியன்று அரசு உயர் மட்ட குழுவில் ஒப்புதல் பெற்று, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம் சி7) துறை, அரசாணை எண்: (3டி) 1, நாள்: 4.3.2023 இன்படி உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் திட்டத்தின் (I & A) கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்காக 12.05.2023 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி பெற்று, 05.06.2023 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கி, 11.06.2023 ஆம் தேதியன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு நாளது தேதியில் 100 சதவிகித பணிகள் முடிக்கப்பட்டுள்ளது, இப்பணிக்காக இதுவரை ரூ.7.00 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.







**சேலம் மாநகராட்சிப் பகுதியில் உள்ள சாலைகள் ரூபாய் 20.00 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.**

சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் சுமார் 11.451 கி.மீட்டர் நீளத்திற்கு வடிகால் மற்றும் சுமார் 16.621 கி.மீட்டர் நீளத்திற்கு சாலைகள் உள்ளடங்கிய 24 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.20.61 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு 11.3.2022 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, 24 பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.03.2024 ஆம் தேதியன்று சேலம் மாநகராட்சியின் வளர்ச்சிக்காக பல்வேறு முக்கிய திட்டங்களை அறிவித்தார்.

**சேலம் மாநகராட்சி செட்டிச்சாவடி திடக்கழிவு மேலாண்மை வளாகத்தில் உள்ள குப்பைகளை பையோ மைனிங் முறையில் அப்புறப்படுத்திட**

அண்ணா பல்கலைகழகம் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, அரசுக்கு சமர்பித்து தற்பொழுது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மதிப்பீடு தொகை ரூ.7.94 கோடி நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 28.02.2025 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

**சேலம் மாநகராட்சி பகுதியில் புதியதாக விலங்கு பிறப்பு கட்டுப்பாடு மையம் (Animal Birth Control Center) அமைக்கப்படும்.**

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் செட்டிச்சாவடி பகுதியில் புதியதாக அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன விலங்கு பிறப்பு கட்டுப்பாடு மையம் (Animal Birth Control Center) கட்டுவதற்கு ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரி, 30.11.2024 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் 25 சதவிதம் முடிக்கப்பட்டு, விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது..

**சேலம் மாநகராட்சியின் தனிக்குடிநீர் திட்டத்தின் நீரேற்று நிலையம் அமைந்துள்ள தொட்டில்பட்டி மற்றும் கோம்புரான்காடு பகுதிகளில் அமைந்துள்ள சுத்திகரிப்பு நிலையம் மற்றும் பூஸ்டர் நிலையத்தை மதிப்பீடு தொகை ரூ.15.00 கோடியில் மேம்படுத்திட**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் படி 4 எண்ணிக்கையிலான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு கூர்ந்தாய்வு பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் பணி ஆணை வழங்கி பணிகள் துவங்கப்படும், பணிகளின் விவரங்கள் :

- சேலம் மாநகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் தனிக்குடிநீர்த் திட்டத்தில் தொட்டில்பட்டியில் அமைந்துள்ள சுத்திகரிக்கப்படாத நீரேற்று நிலையத்தினை மேம்படுத்தும் பணி,
- தனிக்குடிநீர் திட்டத்தில் 155 MLD திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை மேம்படுத்தும் பணி
- தனிக்குடிநீர் திட்டத்தில் தொட்டில்பட்டியில் உள்ள சுத்திகரிக்கப்பட்ட நீரேற்று நிலையத்தினை மேம்படுத்தும் பணி
- தனிக்குடிநீர் திட்டத்தில் கோம்புரான்காட்டில் அமைந்துள்ள சுத்திகரிக்கப்பட்ட நீருந்து நிலையத்தினை மேம்படுத்தும் பணி

**சேலம் மாநகராட்சியின் நங்கவள்ளி குடிநீர் திட்டம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ரூ.10.00 கோடியில் மேம்படுத்தப்படும்.**

நங்கவள்ளி குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்துதல், கருமலைக்கூடல் நீர் உந்து நிலையத்தில் சுற்று சுவர் கட்டுதல் மற்றும் புதியதாக மோட்டார் பம்பு பொருத்துதல் போன்ற 4 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.10.00 கோடிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 15.10.2024 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டு, அதில் 55 சதவிதம் பணிகள் முடிக்கப்பட்டு, விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது.

அதன் விவரங்கள் கீழ்கண்டுள்ளவாறு :

- சேலம் மாநகராட்சியின் 27MLD அளவு கொண்ட நங்கவள்ளி குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் புதியதாக குளோரின் ஆலை கட்டுமானம் அமைத்து கூடுதலாக குளோரின் கலக்கும் ஆலை மற்றும் நீர் சுத்திகரிப்பு நிலைய வடிகட்டி அமைப்பினை புதுப்பிக்கும் பணி.

- கருமலைக்கூடல் நீர் உந்து நிலையத்தில் புதியதாக பம்ப் மற்றும் மோட்டார் (Horizontal Split casing centrifugal pump cum HSC LT Motor 425KW, 3.3kv, 6 pole RPM 1482) அமைத்தல் மற்றும் மின்வட கம்பியினை மாற்றியமைத்தல் உள்ளிட்ட பணிகள்.

- கருமலைக்கூடல் நீர் உந்து நிலையத்தில் மின்காந்த ஓட்ட மீட்டர் (Electromagnetic Flow Meter) NRV மற்றும் Sluice Valves ஆகியவை மாற்றியமைக்கும் பணி.

- கருமலைக்கூடல் நீர் உந்து நிலையத்தில் வடிகட்டி படுக்கை மாற்றியமைத்தல், புதியதாக Aeration tank மற்றும் அலுவலகம், குடியிருப்பு ஆகியவற்றினை பராமரித்தல் உள்ளிட்ட பணிகள்.

## உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் நீண்ட காலமாக தீர்வு காணமுடியாத பிரச்சனைகளை சரி செய்யும் பொருட்டு, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் பணிகள் தேர்வு செய்யப்பட்டு, 15வது மத்திய நிதி குழு மானியம் மற்றும் மூலதன மானிய நிதியின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, பணி ஆணை வழங்கி பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது, அதன் விபரம் பின்வருமாறு :

### சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதி

1. அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்: 17ல் அஸ்தம்பட்டி ஃபேர்லேண்ட்ஸ் கால்வாய் (ஃபேர்லேண்ட்ஸ் முருகன் கோவில் முதல் ஆலமரத்துகாடு வரை) வடிகால் சீரமைப்பு பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.8.00 கோடிக்கு 2023 – 24 ஆம் ஆண்டு 15வது மத்திய நிதி குழு மானிய நிதி கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் இருந்து வருகிறது.

2. அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்: 14 & 15 இல் அஸ்தம்பட்டி, செர்ரி சாலையில் (SHU-18) மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.3.65 கோடிக்கு 2023– 24 ஆம் ஆண்டு 15வது மத்திய நிதி குழு மானிய நிதி கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

3. அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்: 6 இல் உள்ள சரஸ்வதி நகர் மற்றும் முல்லை கார்டன் பகுதியில் வாய்க்கால் மறுசீரமைப்பு செய்யும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.1.63 கோடிக்கு 2023– 24 ஆம் ஆண்டு மூலதன மானிய நிதியின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

### சேலம் தெற்கு சட்டமன்ற தொகுதி

1. கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.49 உள்ள அகரம் காலனி முதல் சூரியகவுண்டர் காடு வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.0.92 கோடிக்கு 2023– 24 ஆம் ஆண்டு 15வது மத்திய நிதி குழு மானியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 22.01.2024 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். இதற்காக தொகை ரூ.26.61 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.49 உள்ள செவ்வாய்பேட்டை மெயின் ரோடு முதல் அகரம் காலனி வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.0.88 கோடிக்கு 2023– 24 ஆம் ஆண்டு 15வது மத்திய நிதி குழு மானியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 22.01.2024 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் இப்பணிகள் யாவும் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். இதுவரை ரூ.39.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## சேலம் மேற்கு சட்டமன்ற தொகுதி

1. சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.22 பகுதியில் சித்தர் கோவில் பிரதான சாலையில் RCC மழைநீர் வடிகால், சிறுபாலம் அமைத்தல் மற்றும் செஞ்சிக்கோட்டை ஓடையில் மழைநீர் வடிகால் மற்றும் கவர்சிலாப் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.6.53 கோடிக்கு 2023– 24 ஆம் ஆண்டு மூலதன மானியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 18.12.2023 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் இப்பணிகள் யாவும் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். இதுவரை ரூ.0.53 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண் –3 இல் பொன்குமார் மைன்ஸ் சாலையில் இருந்து மேச்சேரியான் வட்டம் பிரதான சாலை வரை (கிரிவலப் பாதை) சாலை அமைக்கும் பணிக்கு பதிலாக நரசோதிப்பட்டி கே.எஸ்.வி நகரில் தார் சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.0.94 கோடிக்கு 2023– 24 ஆம் ஆண்டு மண் சாலையினை தார் சாலை மாற்றும் திட்ட நிதியின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

3. சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.03ல் உள்ள இஸ்மாயில் கான் ஏரியை மறு சீரமைப்பு செய்யும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.0.39 கோடிக்கு 2023– 24 ஆம் ஆண்டு 15வது மத்திய நிதிக் குழு மானியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது..

## நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புறம்) ( NNT)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் **11.12.2021** ஆம் தேதியன்று சேலம் மாவட்டத்தில் முதன் முதலாக நமக்கு நாமே திட்டம் (நகர்புறம்) துவக்கி வைக்கப்பட்டது.

### நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புறம்) (2023–24)



நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அரசு மான்யமாக ரூ.**4.18** கோடி மற்றும் பொதுமக்களின் பங்களிப்பாக ரூ.**2.09** கோடி ஆக மொத்தம் மதிப்பீடு தொகை ரூ.**6.27** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தில் மழைநீர் வடிகால் அமைத்தல், குடிநீர் பணிகள், பூங்கா புனரமைப்பு, கட்டிடம் கட்டுதல் மற்றும் சாலை பணிகள் என மொத்தம் இதுவரை **32** எண்ணிக்கையிலான பணிகள் மதிப்பீடு தொகை ரூ.**4.90** கோடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

மேலும் இத்திட்டத்தின் கீழ் **23** எண்ணிக்கையிலான பணிகள் மதிப்பீடு தொகை ரூ.**1.34** கோடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அலுவலகத்தில் **06.02.2025** ஆம் தேதியன்று உரிய அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

## மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களின் 2022–23 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்புகள்

### நவீன எரிவாயு தகன மேடை அமைத்தல் (அறிவிப்பு எண்: 20)

சூரமங்கலம் வார்டு அலுவலகம் ஜாகிர் அம்மாபாளையம் பகுதியில் ரூ.**2.00** கோடி மதிப்பீட்டில் புதியதாக நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, **27.11.2023** ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டது.

மேற்படியான இடத்தில் பணிகள் செயல்படுத்த ஏதுவான சூழ்நிலை இல்லாத காரணத்தால் தற்போது பள்ளப்பட்டி பகுதியில் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது, தமிழ்நாடு மாசுக்கட்டு வாரிய அமைதி பெற்றவுடன் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

**பனமரத்துப்பட்டி ஏரியைச் சுற்றியுள்ள கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் – (அறிவிப்பு எண்: 26)**

சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான 2137.92 ஏக்கர் பரப்பளவில், 168.128 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட பனமரத்துப்பட்டி ஏரியின் நீரினை சுற்றியுள்ள கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டது.

இதன் அடிப்படையில் திருவாளர்கள் CS Associates, Salem நிறுவனத்தை திட்ட ஆலோசகராக நியமனம் செய்து மதிப்பீடு தொகை ரூ.54.00 கோடிக்கு திருத்திய விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

## மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களின் 2023–24 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்புகள்

**எரிவாயு தகன மேடையினை நவீன எரிவாயு தகன மேடையாக மாற்றி அமைத்தல்**

2023 – 24 ஆம் ஆண்டு 15வது மத்திய நிதி குழு மானியத்தின் கீழ் 1. சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.28ல் செவ்வாய்பேட்டை பகுதியில் உள்ள எரிவாயு தகன மேடை 2. அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.12ல் காக்காயன் எரிவாயு தகன மேடை மற்றும் 3. கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.60ல் சீலநாயக்கன்பட்டி எரிவாயு தகன மேடை ஆகிய மூன்று எரிவாயு தகன மேடைகளை (LPG) தகன மேடையாக மாற்றி அமைக்க ஒவ்வொரு தகன மேடைக்கும் மதிப்பீடு தொகை தலா ரூ.55.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.1.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி பணி ஆணை வழங்கப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு, தற்போது பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

## மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களின் 2024–25 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்புகள்

**மாணாக்கர்களுக்கு மிகவும் பயன்படக்கூடிய வகையில் அறிவியியல் பூங்கா அமைக்கப்படும். (அறிவிப்பு எண்.5)**

சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்.09ல் வர்மா கார்டன் பகுதியில் 2024 – 25 ஆம் ஆண்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை மானிய நிதியின் கீழ் அறிவியியல் பூங்கா மதிப்பீடு தொகை ரூ.3.22 கோடியில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது.

**உயிர் எரிவாயு கூடம் பழுது மற்றும் பராமரிப்பு பணி**

2024 – 25 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற மானியக் கோரிக்கை அறிவிப்பில் மாநகராட்சி உயிரி எரிவாயு கூடம் திட்டத்தினை செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் சேலம் மாநகராட்சியில் அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்.9இல் வாய்க்கால் பட்டறை பகுதியில் இயங்கி வரும் 5 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட (Bio – Methanation) பயோ மெத்தனேசன் பிளான்ட் பழுது மற்றும் மறு சீரமைப்பபு பணிக்கு 15வது மத்திய நிதிக் குழு மான்ய நிதியில் (Tied Grant) கீழ் ரூ.0.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேற்படியான பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 30.01.2025 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## பொறியியல் பிரிவு

### குடிநீர் விநியோகம் :

சேலம் மாநகராட்சியில் உள்ள 60 கோட்டங்களில் வசிக்கும் பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய மேட்டூர் அணையில் இருந்து, மாநகராட்சியின் தனிக்குடிநீர் திட்டத்தின் மூலம் தினசரி 134 எம்.எல்.டி. குடிநீரும் மற்றும் நங்கவள்ளி குடிநீர் திட்டத்தின் மூலம் 13.00 எம்.எல்.டி குடிநீரும் ஆக மொத்தம் 147.00 எம்.எல்.டி குடிநீர் பெறப்பட்டு 2 நாட்களுக்கு ஒரு முறை 2 வார்டுகளிலும், 3 நாட்களுக்கு ஒரு முறை 16 வார்டுகளிலும், 4 நாட்களுக்கு ஒரு முறை 10 வார்டுகளிலும் மற்றும் 5 நாட்களுக்கு ஒரு முறை 32 வார்டுகளிலும் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மாநகரில் நாளது தேதிவரை 118004 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மாநகர பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 3091 எண்ணிக்கையிலான ஆழ்துளைக் கிணறுகளில், 679 எண்ணிக்கையிலான கை பம்புகளும், 531 எண்ணிக்கையிலான விசைப் பம்புகளும் மற்றும் 1881 எண்ணிக்கையிலான சிறுவிசை பம்புகளும் பொருத்தப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. இதன் மூலம் தினந்தோறும் 3.72 எம்.எல்.டி. தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

### தனிக்குடிநீர் திட்டம் பராமரிப்பு :

சேலம் மாநகராட்சியின் தனிக்குடிநீர் திட்டத்தின் சிப்பம் 1 முதல் 5 வரையிலான பணிகள் (நிலை–1) ஆற்று நீரேற்று நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், கோம்புரான்காடு நீர் ஊந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள மின் மோட்டார்கள் பராமரிப்பு, தொட்டில்பட்டி நீரேற்று நிலையம் முதல் மாநகராட்சி எல்லை வரை உள்ள வழியோர குடிநீர் குழாய்கள், வால்வுகள் பராமரிப்பு மற்றும் இதர குடிநீர் சம்பந்தப்பட்ட பணிகளை இயக்கம் மற்றும் பராமரிப்பு செய்வதற்கு ஒரு ஆண்டுக்கு மதிப்பீடு தொகை ரூ.9.98 கோடிக்கு திட்ட அறிக்கை தயார் செய்து அரசுக்கு சமர்பிக்கப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது.

அரசிடமிருந்து உரிய அனுமதி கிடைக்கப் பெறாத காரணத்தினால் பராமரிப்பு பணிகளை குறுகிய காலத்திற்கு நீட்டிப்பு செய்ய வேண்டியுள்ளது.

தற்காலிகமாக மேற்படியான பணிகளை தங்கு தடையின்றி தொடர்ந்து மேற்கொள்ள நிர்வாக நலன் கருதி மெசர்ஸ். கே.எஸ்.பி & கோ, மேட்டூர் நிறுவனத்தின் மூலம் பணி ஆணை வழங்கி, பணிகள் நடைபெற்று வருகிறது.

**மாநகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளைக் கிணறு மற்றும் மின் மோட்டார்கள் பராமரிப்பு பணிகள் :**

சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட 14 வார்டுகளில் உள்ள 610 ஆழ்துளைக் கிணறு மின் மோட்டார்கள், கம்பரஸர்கள் மற்றும் நீர்மூழ்கி மோட்டார்களின் பழுதினை சரி செய்தல், HDPE டேங்குகளை சுத்தம் செய்தல் மற்றும் அதற்கு உண்டான பைப்லைன்களில் ஏற்படும் தண்ணீர் கசிவினை சரி செய்தல் போன்ற பணிகளை ஆறு மாதங்களுக்கு உடனுக்குடன் பழுது நீக்கி, பராமரிப்பு பணிகள் ரூ.62.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள திரு.எம்.வெங்கடேசன் ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட 14 வார்டுகளில் உள்ள 523 ஆழ்துளைக் கிணறு மின் மோட்டார்கள், கம்பரஸர்கள் மற்றும் நீர்மூழ்கி மோட்டார்களின் பழுதினை சரி செய்தல், HDPE டேங்குகளை சுத்தம் செய்தல் மற்றும் அதற்கு உண்டான பைப்லைன்களில் ஏற்படும் தண்ணீர் கசிவினை சரி செய்தல் போன்ற பணிகளை ஆறு மாதங்களுக்கு உடனுக்குடன் பழுது நீக்கி, பராமரிப்பு பணிகள் ரூ.62.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள திரு.எம்.வெங்கடேசன் ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட 16 வார்டுகளில் உள்ள 876 ஆழ்துளைக் கிணறு மின் மோட்டார்கள், கம்பரஸர்கள் மற்றும் நீர்மூழ்கி மோட்டார்களின் பழுதினை சரி செய்தல், HDPE டேங்குகளை சுத்தம் செய்தல் மற்றும் அதற்கு உண்டான பைப்லைன்களில் ஏற்படும் தண்ணீர் கசிவினை சரி செய்தல் போன்ற பணிகளை ஆறு மாதங்களுக்கு உடனுக்குடன் பழுது நீக்கி, பராமரிப்பு பணிகள் ரூ.88.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள M/s. K3 Associates India Private Limited ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட 16 வார்டுகளில் உள்ள 640 ஆழ்துளைக் கிணறு மின் மோட்டார்கள், கம்பரஸர்கள் மற்றும் நீர்மூழ்கி மோட்டார்களின் பழுதினை சரி செய்தல், HDPE டேங்குகளை சுத்தம் செய்தல் மற்றும் அதற்கு உண்டான பைப்லைன்களில் ஏற்படும் தண்ணீர் கசிவினை சரி செய்தல் போன்ற பணிகளை ஆறு மாதங்களுக்கு உடனுக்குடன் பழுது நீக்கி, பராமரிப்பு பணிகள் ரூ.64.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள திரு.எம்.வெங்கடேசன் ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

**மாநகராட்சிக்கு சொந்தமான குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் பராமரிப்பு பணிகள்:**

சேலம் மாநகராட்சி நான்கு வார்டு அலுவலகங்களுக்குட்பட்ட 60 கோட்டங்களில் உள்ள குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அடிக்கடி பழுது ஏற்பட்டு பொதுமக்களுக்கு சீராக குடிநீர் வழங்கிட தாமதம் ஆகிறது.

எனவே, இதனை தவிர்க்க அனைத்து கோட்டங்களிலும் குடிநீர் விநியோக பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்கள் ஆகியவற்றின் பழுது பணியை போர்க்கால அடிப்படையில் சரி செய்ய வேண்டி இருக்கிறது.

குடிநீர் வீணாகாமல் பழுது பணிகளை உடனுக்குடன் நிறைவேற்றி முடித்து தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக இப்பணிகளை மேற்கொள்ள, சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட 14 வார்டுகளில் உள்ள குடிநீர் விநியோக பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்களின் பழுது பணியை ரூ.48.00/– இலட்சத்தில் ஒரு வருடத்திற்கு மேற்கொள்ள திரு.எம்.வெங்கடேசன் ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட 14 வார்டுகளில் உள்ள குடிநீர் விநியோக பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்களின் பழுது பணியை ரூ.48.00/– இலட்சத்தில் ஒரு வருடத்திற்கு மேற்கொள்ள M/s.சுவேதலட்சுமி இன்ஜினியரிங் ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட 16 வார்டுகளில் உள்ள குடிநீர் விநியோக பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்களின் பழுது பணியை ரூ.56.00/– இலட்சத்தில் ஒரு வருடத்திற்கு மேற்கொள்ள M/s. சுவேதலட்சுமி இன்ஜினியரிங் ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட 16 வார்டுகளில் உள்ள குடிநீர் விநியோக பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்களின் பழுது பணியை ரூ.56.00/– இலட்சத்தில் ஒரு வருடத்திற்கு மேற்கொள்ள திரு.ஆர்.ராஜ்குமார் மற்றும் M/s.ஸ்ரீ பவம் டெவலப்பர்ஸ், ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி, பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

**மழைநீர் சேகரிப்பு திட்டம் :**

சேலம் மாநகராட்சி பகுதியில் உள்ள 212261 எண்ணிக்கையிலான வரி விதிப்புகளில் நாளது தேதி வரை 188256 எண்ணிக்கையிலான வீடுகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உள்ளதா என ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதில் 161796 எண்ணிக்கையிலான வீடுகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு நல்ல நிலையில் உள்ளது. 26460 எண்ணிக்கையிலான வீடுகளில் மழைநீர் சேகரிப்பு உள்ள போதிலும், புனரமைப்பு வேண்டிய நிலையில் உள்ளது. புனரமைப்பு செய்யக் கோரி சம்மந்தப்பட்டவர்களுக்கு அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 36823 எண்ணிக்கையிலான வீடுகளுக்கு புதியதாக மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை அமைக்க கோரி, அறிவிப்பு நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை புனரமைப்பு செய்து நிலத்தடி நீர் மட்டம் உயர விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அம்ரூத் 2.0 திட்டம் – (2022–23)**

இத்திட்டத்தின் கீழ் சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்குட்பட்ட சத்திரம் தெப்பக்குளத்தினை ரூ.15.44 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 02.01.2023ம் தேதி அன்று பணி ஆணை வழங்கி பணிகள் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட அம்பாள் ஏரியை ரூ.77.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பு செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி 02.01.2023 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கி பணி முடிக்கப்பட்டு, தற்போது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**அம்ரூத் 2.0 திட்டம் – (2023–24)**

2023 – 24 ஆம் ஆண்டு அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.37ல் குமரகிரி ஏரி பகுதியில் 1 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.463.00 இலட்சத்திற்கு, ஒப்பந்தப்புள்ளி கோரி பணி ஆணை வழங்கி, பணிகள் நடைபெற்று வருகிறது.

**பொது நிதியின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள் :**

2023–24 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.1524.70 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 88 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டதில், 80 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 8 பணிகள் நடைபெற்று வருகிறது.

2024–25 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ. 891.55 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 57 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டதில், 40 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 17 பணிகள் நடைபெற்று வருகிறது.

**குடிநீர் நிதியின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள்**

2023–24 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.1251.30 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 86 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணி ஆணை வழங்கி பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

2024–25 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ. 723.24 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 59 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டதில், 51 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 8 பணிகள் நடைபெற்று வருகிறது.

**கல்வி நிதியின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள்**

2023–24 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி கல்வி நிதியின் கீழ் ரூ.346.60 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 13 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டதில், 11 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 2 பணிகள் நடைபெற்று வருகிறது.

2024–25ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி கல்வி நிதியின் கீழ் ரூ.225.10 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 9 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டதில், 6 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 3 பணிகள் நடைபெற்று வருகிறது.



## புதிய வாகனங்கள் வாங்கப்பட்டது

சேலம் மாநகராட்சியின் 21 எண்ணிக்கைகளிலான வாகனங்களை மைய அலுவலகம் மற்றும் நான்கு வார்டு அலுவலகங்களின் அலுவலர்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதியின்படி, 4 எண்ணிக்கைகளில் (ஸ்கார்பியோ–1 மற்றும் பொலீரோ–3 ஆக மொத்தம் 4 எண்ணிக்கைகள்) புதிய வாகனங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

மொத்தம் உள்ள 25 வாகனங்களில் 14 வாகனங்கள் 18 ஆண்டுகளாக பயன்பாட்டில் இருக்கும் காரணத்தால் அரசு விதிகளின்படி வருகிற 2025 செப்டம்பர் மாதத்தில் நிறுத்தப்பட உள்ளது. மீதம் 11 வாகனங்கள் பயன்பாட்டில் இருந்து வரும் சூழ் நிலை ஏற்படுகிறது.

சேலம் மாநகராட்சிக்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் அனுமதிக்கப்பட்ட 18 வாகனங்களில் 11 வாகனங்கள் மட்டுமே பயன்பாட்டில் உள்ள நிலையில் புதியதாக 7 வாகனங்களை (GeM Portal) ஜெம் விலை விகிதப்படி (ஸ்கார்பியோ–1 எண்ணிக்கை ரூ.19.00 இலட்சம் மற்றும் பொலீரோ–6 எண்ணிக்கைகள் ரூ.80.00 இலட்சம் ஆக மொத்தம் 7 எண்ணிக்கையில் மொத்த மதிப்பீடு ரூ.99.00 இலட்சங்களில் வாங்கிட, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## பள்ளி மேம்பாட்டு மானியத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள்

2022 – 2023 ஆம் ஆண்டு பள்ளி மேம்பாட்டு மானியத்தின் கீழ் மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிக்காக ரூ.402.30 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 8 எண்ணிக்கையிலான பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி ஆணை வழங்கி, 6 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 2 பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் பராமரிப்பு பணிக்காக ரூ.176.00 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 7 எண்ணிக்கையிலான பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி ஆணை வழங்கி, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**2023 – 2024** ஆம் ஆண்டு பள்ளி மேம்பாட்டு மானியத்தின் கீழ் மாநகராட்சி பள்ளிகளில் பராமரிப்பு பணிக்காக ரூ.**625.00** இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் **20** எண்ணிக்கையிலான பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி ஆணை வழங்கப்பட்டு, **13** பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள **7** பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

**2024 – 2025** ஆம் ஆண்டு பள்ளி மேம்பாட்டு மானியத்தின் கீழ் மாநகராட்சி பள்ளிகளில் உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிக்காக ரூ.**219.00** இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் **9** எண்ணிக்கையிலான பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி ஆணை வழங்கி, பணிகள் நடைபெற்று வருகிறது மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் பராமரிப்பு பணிக்காக ரூ.**194.00** இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் **17** எண்ணிக்கையிலான பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி ஆணை வழங்கி, பணிகள் நடைபெற்று வருகிறது.

**2024 – 2025** ஆம் ஆண்டு பள்ளி மேம்பாட்டு மானியத்தின் கீழ் உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிக்காக (நிலை – III) ரூ.**112.00** இலட்சம் மதிப்பீட்டில் அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்.**43**ல் புது தெரு மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி (**8** எண்ணிக்கையிலான வகுப்பறைகள் கட்டும் பணி) எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

## புதிய முன்மொழிவுகள்

### பூங்காக்கள் அபிவிருத்தி பணி :

சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காக்களில் நடைபாதை, சுற்றுசுவர், இணைப்பு வேலி அமைத்தல், மின் விளக்குகள் பொருத்துதல், குழந்தைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் அமைத்தல், கிரானைட் பெஞ்ச் அமைத்தல், பாதுகாப்பு அறை மற்றும் பிரதான வாயில் அமைத்தல், கூடுதல் நீர் விநியோகத்துடன் கூடிய போர்வெல் அமைத்தல், பசுமையான புல் தரைகள் அமைத்தல்,

8 நடைபாதை அமைத்தல், மூலிகை பண்ணை அமைத்தல், யோக செட் அமைத்தல், CCTV காண்காணிப்பு கேமரா பொருத்துதல், மழைநீர் வடிகால் அமைத்தல் போன்ற அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள 35 எண்ணிக்கையிலான பூங்காக்களுக்கு மதிப்பீடு தொகை ரூ.17.57 கோடிக்கு திட்ட பிரேரனைகள் தயார் செய்யப்பட்டு, அரசின் நிதி கோரி சமர்பிக்கப்பட்டு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு பெறும் நடவடிக்கையில் உள்ளது. விரைவில் நிதி ஒதுக்கீடு பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்படும்.

### மழைநீர் வடிகால் :

சேலம் மாநகராட்சி நான்கு வார்டு அலுவலகங்களுக்குட்பட்ட 60 கோட்டங்களில் சுமார் 1200.925 கி. மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள் மற்றும் 5290 எண்ணிக்கையிலான சிறுபாலங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

தற்போது 60 கோட்டங்களிலும் உள்ள தெருக்களில் இருக்கும் வடிகால்கள் 30 ஆண்டுகளுக்கு மேலாகி மிகவும், பழுதடைந்து நிலையில் இருப்பதால் கழிவு நீர் சீராக செல்ல இயலாமல் தேங்கி நின்று செல்வதால் பொது சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. மேலும் சாலைகளின் விளிம்பு பகுதிகளில் உடைப்பு ஏற்பட்டு சாலைகளும் பழுதடைகிறது. எனவே புதியதாக வடிகால்கள் புதுப்பிக்க வேண்டுமென பொதுமக்களிடமிருந்தும், மாமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் தொடர்ந்து கோரிக்கைகள் வருவதால் 60 கோட்டங்களிலும் உள்ள வடிகால்களை புதியதாக கட்டவும் வடிகால்கள் இல்லாத தெருக்களில் புதியதாக வடிகால்கள் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.140.00 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை (D.P.R.) தயார் செய்யப்பட்டுள்ளது.

மாநகரப் பகுதியில் மழைநீர் வடிகால்கள் மற்றும் சிறுபாலங்கள் அமைக்கும் பணிகளை மேற்கொள்ள Tamil Nadu Climate Resilient Urban Development Project (TNCRUDP) Fund திட்ட நிதியின் கீழ் முழு அரசு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்ய ஏதுவாக தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி சேவை கழகம் (TNUIFSL) நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது, உரிய அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**புதிய மண்டல அலுவலகம் கட்டுதல்:**

சேலம் மாநகராட்சி வார்டு அலுவலகங்களில் அந்தந்த கோட்டங்களுக்கு உண்டான பணிகள் உதவி ஆணையாளர் மற்றும் செயற்பொறியாளர் தலைமையில் மேற்கொள்ளப்படுகிறது. வார்டு அலுவலகங்களில் பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, பொதுப் பிரிவு, சுகாதார பிரிவு, நில அளவை பிரிவு, தணிக்கை பிரிவு மற்றும் பதிவேடு இருப்பு அறை ஆகிய பிரிவுகளுக்கு போதிய இட வசதி இல்லாமல் இயங்கி வருகின்றன. மேலும் அலுவலர்கள், வார்டு அலுவலகத்திற்கு வருகை தரும் பொது மக்கள் ஆகியோர்களின் வாகனங்களை நிறுத்த இட வசதியே இல்லை என்பதால் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய 3 வார்டு அலுவலகம் கட்டுவதற்கு கீழ்கண்டுள்ள விவரப்படி ரூ.15.00 /– கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசுக்கு சமர்பிக்கப்பட்டு நடவடிக்கையிலிருந்து வருகிறது. நிதி ஒதுக்கீடு கிடைக்க பெற்றவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ரூ.கோடியில்)

| வ.எண். | வார்டு அலுவலகம் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1. | சூரமங்கலம் வார்டு அலுவலகம் | 5.00 |
| 2. | அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் | 5.00 |
| 3. | அம்மாபேட்டை வார்டு அலுவலகம் | 5.00 |
| | மொத்தம் | 15.00 |

**சந்தைப்பேட்டை வணிக வளாகம்:**

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.28ல் அமைந்துள்ள சந்தப்பேட்டை பகுதியானது சேலம் மாநகரில் உள்ள வணிக பொருட்களுக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்திட ஒரு முக்கிய பகுதியாக விளங்குகிறது.

செவ்வாய்பேட்டை சந்தைப்பேட்டை பகுதியில் ஏற்கனவே 1990ஆம் ஆண்டு முந்தைய சேலம் நகராட்சி காலத்தில் வணிக பயன்பாட்டிற்காகவும் மற்றும் வருவாய் அதிகப்படுத்தும் நோக்கத்தை கருத்தில் கொண்டு 30 கடைகள் கட்டப்பட்டுள்ளது. மேலும் அக்கடைகள் 30 ஆண்டுகள் மேல் நிறைவுச் செய்ததால் பல கடைகளில் உறுதி தன்மையினை இழந்து, மிகவும் பழுது அடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது.

சேலம் மாநகராட்சி சந்தப்பேட்டை வணிக வளாகம் ஆனது சுமார் 1,00,000 சதுர.அடி நிலப்பரப்பில் அமைந்துள்ளது. மேலும் பழுதாகிய கடைகளை இடித்து அப்புறபடுத்திவிட்டு புதியதாக (9+2) கடைகள் கட்ட சுமார் ரூ.60.00 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படியான நவீன வணிக வளாகம் மூலம் சேலம் மாநகராட்சிக்கு அதிக வருவாயினை பெருக்கிடவும் மற்றும் நிதி நிலைமையை மேம்படுத்தவும் வாய்ப்பு உள்ளது.

**சூரமங்கலம் மண்டலம் கோட்டம் எண்.20 வணிக வளாகம் கட்டுதல் :**

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலம் கோட்டம் எண்.20க்கு உட்பட்ட சூரமங்கலம் மெயின் ரோடில் உள்ள சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான உழவர் சந்தை வணிக வளாகமானது தீ விபத்து ஏற்பட்டு கட்டிடங்கள் சேதமடைந்தது. வணிக வளாகமானது மிகவும் பலவீனம் அடைந்து இடிந்து விழும் அபாய நிலையில் இருப்பதால் மன்றத்தின் அனுமதி பெற்று பாதுகாப்பான முறையில் சேதமடைந்த வணிக வளாகம் முழுவதினையும் இடித்து அப்புறப்படுத்தப்பட்டது.

இந்த வணிக வளாக கடைகளில் வாடகைக்கு எடுத்து பிழைப்பு செய்து வந்தவர்கள் மற்றும் லட்சக்கணக்கான வாடிக்கையாளர்களின் நலன் கருதியும், பொதுமக்களின் அன்றாட தேவைகளுக்காகவும் மற்றும் சேலம் மாநகராட்சியின் வருவாய் இழப்பினை ஈடுசெய்ய வேண்டியும் அதே இடத்தில் புதிய பொழிவுடனும், நவீன வசதிகளுடனும், புதிய நவீன வணிக வளாகத்தினை கட்டி பொது மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கிட ஏதுவாக தோராய மதிப்பீடுகள் ரூ.6.00/– கோடிக்கு தயார் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

பாலம் அமைத்தல்

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் பகுதிகளில் மழைநீர் செல்லும் நீர்வழி பாதையில் அமைந்துள்ள பாலங்கள், மழை காலங்களில் வெள்ளப்பெருக்கின் காரணமாக போக்குவரத்து மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளதால், மேற்படி பாலங்களை உயர்மட்ட மேம்பாலமாக புதுபித்து கட்டும் பணிகள் உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தில் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு நடவடிக்கையில் உள்ளது, அரசிடம் இருந்து உரிய நிதி கிடைக்க பெற்றதும் பணி மேற்கொள்ளப்படும், அவற்றின் விபரம் பின் வருமாறு :

(ரூ.கோடியில்)

| வ. எண். | வார்டு எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை |
|---|---|---|---|
| 1. | 5,7 | கோட்டம் எண்.5 மற்றும் 7 இல் அமைந்துள்ள அழகாபுரம் பெரியபுதூரையும் ஏற்காடு சாலை பகுதிகளையும் இணைக்கும் ATC நகர் தரைபாலத்தை மேம்பாலமாக உயர்த்தி கட்டும் பணி | 2.18 |
| 2. | 15 | கோட்டம் எண்.15ல் அமைந்துள்ள அருண் நகர், லட்சுமி சுந்தர் நகரையும் இணைக்கும் பழுதடைந்துள்ள பாலத்தை புதியதாக கட்டும் பணி | 1.83 |
| 3. | 15 | கோட்டம் எண்.15ல் அமைந்துள்ள KMS கார்டன் பகுதியில் பழுதடைந்துள்ள குறுகிய பாலத்தை அப்புறப்படுத்திவிட்டு புதிய பாலமாக கட்டும் பணி | 1.86 |
| | | மொத்தம் | 5.87 |

## சாலைகள்

சேலம் மாநகராட்சியில் நாளது தேதியில் கீழ் கண்டுள்ள விபரப்படி மொத்தம் 7731 எண்ணிக்கையிலான சாலைகள் 1037.173 கி. மீட்டர் நீளத்திற்கு பராமரிக்கப்படுகிறது.



மாநகராட்சிகளில் பராமரிக்கப்படும் அனைத்து சாலைகளையும் காலமுறை பயன்பாட்டின்படி சீரான பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், மண்சாலைகளை முன்னுரிமை அடிப்படையில் தார் மற்றும் சிமெண்ட் சாலைகளாக மாற்றம் செய்திட கீழ் கண்டுள்ளவாறு சாலைகளை தரம் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு சாலைகளுக்கும் ஒருங்குறியீட்டு எண் (Unicode) வழங்கப்பட்டு சாலைப்பதிவேடுகள் (Road Ledger) தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக நகர்புற சேவை உட்கட்டமைப்பு இணையதளத்தில் (UTIS) பதிவேற்றம் செய்யப்பட்டு பராமரிக்கப்படுகிறது.



தற்போது மாநகரில் பாதாள சாக்கடைத் திட்டப்பணிகளால் சேதம் அடைந்த சாலைகளை மறு சீரமைப்பு மற்றும் பழுது பணிகளை மேற்கொள்ள 2024 –2025 ஆம் ஆண்டிற்கான சாலை பராமரிப்பு பணிகளுக்கு கீழ்கண்டுள்ள விபரப்படியான விரிவான திட்ட அறிக்கைகள் தயார் செயப்பட்டது, தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது.

### TURIP - பழுதடைந்த சாலைகள்

தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாலை மறுசீரமைப்பு பணிகளுக்கான (Damage Road) மதிப்பீடு தொகை அரசு மானியம் ரூ.23.49 கோடிக்கு 55.563 கி.மீ நீளத்திற்கு 384 எண்ணிக்கையிலான சாலை பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, நாளது தேதியில் 291 எண்ணிக்கையிலான சாலை பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

### NSMT – பழுதடைந்த சாலைகள்

நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சாலை மறுசீரமைப்பு பணிகளுக்கான (Damage Road) மதிப்பீடு தொகை அரசு மானியம் ரூ.8.21 கோடிக்கு 26.717 கி.மீ நீளத்திற்கு 176 எண்ணிக்கையிலான சாலை பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, நாளது தேதியில் 133 எண்ணிக்கையிலான சாலை பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

### 15th CFC பழுதடைந்த சாலைகள்

15வது மத்திய நிதிக் குழு மான்ய நிதியின் கீழ் சாலை மறுசீரமைப்பு பணிகளுக்கான (Damage Road) மதிப்பீடு தொகை அரசு மானியம் ரூ.4.81 கோடிக்கு 12.890 கி.மீ நீளத்திற்கு 88 எண்ணிக்கையிலான சாலை பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, நாளது தேதியில் 52 எண்ணிக்கையிலான சாலை பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

### 15 –வது மத்திய நிதிக் குழு நிதி (15th CFC) – 2021-2022

15–வது மத்திய நிதிக் குழு நிதியின் கீழ் மதிப்பீடு தொகை ரூ.75.42 கோடிக்கு வடிகால் அமைத்தல், குடிநீர் பணி, நுண்ணுயிரி உரம் தயாரிக்கும் பணி ஆகிய 113 எண்ணிக்கையிலான பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, இதில் 98 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 15 பணிகள் நடைபெற்று வருகிறது. நாளது தேதியில் ரூ.62.48 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 15– வது மத்திய நிதிக் குழு நிதி (15th CFC) – 2022-2023

15–வது மத்திய நிதிக் குழு நிதியின் கீழ் மதிப்பீடு தொகை ரூ.46.63 கோடிக்கு குடிநீர் பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் போன்ற 81 எண்ணிக்கையிலான பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, இதில் 70 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 11 பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளுக்காக நாளது தேதியில் ரூ.30.71 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 15 வது மத்திய நிதிக் குழு நிதி (15th CFC) – 2023-2024

அம்மாபேட்டை மண்டலத்திற்குட்பட்ட கோட்டம் எண்.36ல் உள்ள தாதம்பட்டி அல்லிக்குட்டை ஏரி புனரமைப்பு பணி 2022–2023–ம் ஆண்டு உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் (I & A) திட்ட நிதியின் கீழ், ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு புனரமைப்பு மற்றும் அழகுபடுத்தும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.





மேற்படி திட்ட மதிப்பீட்டில் ஏரிக்கு வெளியே வரும் உபரி நீரை கொண்டு செல்ல தேவையான வடிகால் அமைப்பு இல்லை, கச்சா கால்வாய் அமைக்கும் பணி, ஏரியில் ஏற்கனவே தேங்கி நிற்கும் தண்ணீரை வெளியேற்றும் (Dewatering work) பணி, தென்மேற்கு பகுதியில் இருந்து வடக்கு பகுதி வரை வீராணம் மெயின்ரோடு வாய்க்கால் வரை கழிவுநீர் கால்வாய் (Diversion Channel) அமைக்கும் பணி முதலியவை மேற்கொள்ள வேண்டியுள்ளது, இப்பணி மதிப்பீடு தொகை ரூ.1.77 கோடிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி ஆணை வழங்கி, பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது பொது மக்கள் பயன்பாட்டில் விடப்பட்டுள்ளது.

## இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதி (O & M) – 2023-2024

2023 – 24 ஆம் ஆண்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதியின் கீழ் சேலம் மாநகராட்சியின் தனிக் குடிநீர் திட்டம் செயல்படும் கோம்புரான்காடு மற்றும் நங்கவள்ளி குடிநீர் திட்டத்தின் ராமன் டவர் நீர்ரேற்று நிலையத்தில் மோட்டர்கள் மற்றும் பம்புசெட்டுகள் கொள்முதல் செய்து பொருத்தும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.2.40 கோடிக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு, பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. இப்பணிக்காக நாளது தேதிவரை ரூ.1.55 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## மூலதன மான்ய நிதி (CGF) – 2021 -2022

மூலதன மான்ய நிதியின் கீழ் அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்: 5–ல் அழகாபுரம் பெரிய புதுார் பகுதியில் புதியதாக நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வந்த நிலையில் ஒப்பந்ததாரர் குறித்த காலத்திற்குள் பணிகளை முடிக்காத காரணத்தால் ஒப்பந்ததாரரின் பணி ஆணையினை ரத்து செய்யப்பட்டு மறுஒப்பந்தப்புள்ளி கோரி, பணிகள் நடைபெற்று வருகிறது.

அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்: 35–ல் ஜோதி டாக்கீஸ் பகுதியில் புதியதாக நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வந்த நிலையில் ஒப்பந்ததாரர் குறித்த காலத்திற்குள் பணிகளை முடிக்காத காரணத்தால் ஒப்பந்ததாரரின் பணி ஆணையினை ரத்து செய்யப்பட்டு, மறுஒப்பந்தப்புள்ளி கோரி, பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

## உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் பொது நிதி

சேலம் மாநகராட்சியின் அம்மாபேட்டை மண்டல அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண் 44 இல் குகை எருமாபாளையம் மெயின் ரோடு குப்பைமேடு பகுதியில் மேல்தளம் மட்டும் போடப்பட்டுள்ள நவீன எரிவாயு தகன மேடை கட்டிடத்தில், பழுதடைந்த எரிவாயு கலன், மற்றும் புதியதாக விடுபட்டுள்ள பணிகளை மேற்கொள்ள பணி ஆணை வழங்கி, நடவடிக்கையில் உள்ளது.

## மூலதன மானிய நிதி 2023-2024

2023 – 2024 ஆம் ஆண்டு மூலதன மானிய நிதியின் கீழ் அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.15 ல் ஐயர் தோட்டம் (மத்திய சிறைச் சாலை பின்புறம்) வரட்டாற்றில் இணைப்பு பாலம் மதிப்பீட்டு தொகை ரூ.0.96 கோடிக்கு அமைக்க 11.12.2023 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கி, பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**2023 – 2024** ஆம் ஆண்டு மூலதன மானிய நிதியின் கீழ் அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட மூக்கனேரியை அழகுபடுத்தும் பணி உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் (I & A) திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது, மூக்கனேரியில் வெளியேறும் உபரிநீர் ஓடை வழியாக திருமணிமுத்தாரை வந்து சேருகிறது இந்த கால்வாயை மறுசீரமைப்பு செய்யும் பணி ரூ.11.07 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**மூலதன மானிய நிதி 2024–2025**

சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்.10ல் திருமணிமுத்தாற்று பகுதியில் செங்கல்அணை பகுதியில் திருமணிமுத்தாற்று குறுக்கே பாலம் அமைக்கும் பணி ரூ.8.56 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, ஒப்புந்தப்புள்ளி கோரி, பணி ஆணை வழங்கப்பட்டு, பணி துவங்கப்பட்டுள்ளது.

**ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் நிதி (Health and Hygine )**

**2023 – 2024** ஆம் ஆண்டு ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் நிதியின் கீழ் சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.25ல் பள்ளப்பட்டி பகுதியில் புதிய உணவு தெரு (New Food Street) அமைக்க மதிப்பீடு தொகை ரூ.3.00 கோடிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 30.01.2024 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

**2023 –2024 நகர்ப்புற துணை சுகாதார வளாகம் (NUHM)**

**2023– 2024** ஆம் ஆண்டு தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ் 12 எண்ணிக்கையிலான துணை சுகாதார மையங்கள், 4 எண்ணிக்கையிலான கூடுதல் நகர்புற ஆரோக்கிய நல மையங்கள் மற்றும் ஒரு புதிய நகர்புற சுகாதார நல மையம் என மொத்தம் 17 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.720.00 இலட்சத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி, 11.10.2023 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டு, 4 எண்ணிக்கையிலான பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

## 15 வது மத்திய நிதிக் குழு நிதி (15$^{th}$ CFC) – 2024-2025

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்குட்பட்ட சுப்புரமணியம் நகரில் மதிப்பீடு தொகை ரூ.1.50 கோடிக்கு புதியதாக நகர்ப்புற சுகாதார வளாகம் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது.

சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்.40ல் அண்ணா மருத்துவமனை வளாகம் மற்றும் கோட்டம் எண்.42ல் கிச்சிப்பாளையம் ஆகிய பகுதிகளில் தலா ரூ.0.60 கோடி மதிப்பீட்டில் கூடுதல் நகர்ப்புற சுகாதார வளாகம் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி ஆணைவழங்கப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது.

## நூலகம் மேம்பாடு

2023 – 2024 ஆம் ஆண்டு மூலதன மானிய சிறப்பு நிதியின் கீழ் சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.20ல் உள்ள பழைய சூரமங்கலம் நூலகம் மற்றும் அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.14ல் உள்ள மாவட்ட மத்திய நூலகம் ஆகியவற்றை புதுபிக்கும் பணிகள் மதிப்பீடு தொகை ரூ.0.44 கோடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

## நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி

சேலம் மாநகராட்சி 2023–2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் அஸ்தம்பட்டி மண்டலம் கோட்டம் எண் 15 இல் சேலம் மேற்கு வட்டம், அழகாபுரம் புதூர் கிராமம், சர்வே எண் 179/1, 25 A, 5B காயத்திரி நகர் முனியப்பன் கோவில் அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடத்தில் சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் பூங்கா மேம்பாடு செய்யும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.19.00 இலட்சத்திற்கு பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு தற்போது பணி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

## ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட நிதி

சேலம் மாநகராட்சி 2024–2025 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட நிதியின் கீழ் நான்கு வார்டு அலுவலகளுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள 27 எண்ணிக்கையிலான ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி மையங்களில் புதியதாக தலா ஒரு கழிப்பறைகள் கட்டும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.9.72 இலட்சத்திற்கு பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கையில் உள்ளது. ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## தெரு விளக்கு பராமரிப்பு

சேலம் மாநகராட்சி நான்கு வார்டு அலுவலகங்களுக்குட்பட்ட பகுதிகளில் கீழ் கண்டுள்ள விபரப்படியான தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ. எண் | விளக்குகள் விபரங்கள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 20 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் (தெருவிளக்குகள் 20666 மற்றும் அலுவலகத்தில் உள்ளவை 2,291) | 22957 |
| 2 | 30 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 728 |
| 3 | 40 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 1900 |
| 4 | 60 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 4269 |
| 5 | 90 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 12909 |
| 6 | 200 வாட்ஸ் எல்.இ.டி உயர்மின் கோபுர விளக்குகள் | 297 |
| 7 | 150 வாட்ஸ் எல்.இ.டி உயர்மின் கோபுர விளக்குகள் | 22 |
| 8 | 120 வாட்ஸ் எல்.இ.டி அலங்கார தெரு விளக்குகள் | 904 |
| | **மொத்தம்** | **43986** |

மாநகராட்சி பகுதிகளில் உள்ள 40 வாட்ஸ் குழல் வடிவிலான தெருவிளக்குகளுக்கு பதிலாக புதிய 20 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகளாக பொருத்திடவும், அதற்கான மின்சேமிப்பு உபகரணங்களை பொருத்திடவும், தனியார் பங்களிப்புடன் செயல்படுத்த மின்சேமிப்பு திட்டத்தின் கீழ் (ESCO) ரூ.24.77 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேலும் இத்திட்டத்தின் கீழ் 60 கோட்டங்களில் உள்ள 2,551 எண்ணிக்கையிலான தெருவிளக்கு சுவிட்ச் பாக்ஸ்கள் அனைத்தும் தானியங்கி மின்சேமிப்பு சுவிட்ச் பாக்ஸ்களாக (Street Light Controller) மாற்றப்பட்டுள்ளது.

சேலம் மாநகர பகுதிகளில் உள்ள அனைத்து தெருவிளக்குகளும் மின்சாரம் சேமிக்கும் பொருட்டு நாளது தேதியில் எல்.இ.டி விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள் ஒளிர்வதை கண்காணிப்பதற்கு மாநகராட்சி மைய அலுவலக வளாகத்தில் தெருவிளக்கு கட்டுப்பாட்டு அறை (Central Control Monitoring Center) நிறுவப்பட்டு, தெருவிளக்குகளின் செயல்பாடுகள் அனைத்தும் ஆன்லைன் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

தெருவிளக்குகள் பயன்பாட்டிற்காக இத்திட்டத்தின் மூலம் நாளது தேதியில் **60.47** சதவீதம் மின்சேமிப்பு கிடைக்கப்பெற்று ஆண்டுக்கு சராசரியாக ரூ.**4.00** கோடி ரூபாய் மின்கட்டணம் சேமிக்கப்படுகிறது.







**2022–23** ஆம் ஆண்டு **15**வது நிதி குழு மான்யத்தின் கீழ் தெரு விளக்கு தேவைப்படும் இடங்களில் புதியதாக மின்கம்பங்கள், புதைவட கேபிள்களுடன் கூடிய எல்.இ.டி தெருவிளக்கு **800** எண்ணிக்கையில் அமைக்கும் பணிக்கு ரூ.**8.27** கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

**பாதாள சாக்கடைத் திட்டம்**

சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசாணை எண்.**60**(டி), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.**3**) துறை, நாள்.**23.2.2006** ன்படி உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.**149.39** கோடி மதிப்பீட்டில் **7** சிப்பங்களாக பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு **1,2,3** ஆகிய மூன்று சிப்பங்கள் **421.67** கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் குழாய் பதிக்கும் பணிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டது. மீதமுள்ள **4, 5, 6** மற்றும் **7** சிப்பங்கள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டது.

### கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் 4 இடங்களில் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

### வெள்ளக்குட்டை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்



சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை மண்டலத்திற்கு உட்பட்ட வெள்ளக்குட்டை பகுதியில் 2.42 ஏக்கர் (Ward-J, Block-19, T.S.No.2/1) பரப்பளவில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் தினசரி 13 MLDயும், MASP (Modified Activated sludge Process) தொழில் நுட்பத்தில் ரூ.9.96 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது தற்போது தினசரி 12 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது.

### வண்டிப்பேட்டை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்திற்கு உட்பட்ட வண்டிப்பேட்டையில் 2.53 ஏக்கர் (Ward-F, Block-1, T.S.No.45) பரப்பளவில் கழிவுநீர் சுத்திகரிப்பு பணிகள் தினசரி 44 MLD FAB (Fluidized Aerobic Bio-Reactor) தொழில் நுட்பத்தில் ரூ.22.86 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இதில் தினசரி 2 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது.



### மான்குட்டை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்திற்கு உட்பட்ட மான்குட்டை பகுதியில் 2.44 ஏக்கர் (S.F No.24/2 Bodinaicken Patti Village) பரப்பளவில் தினசரி 35 MLD அளவிற்கு, கழிவுநீர் சுத்திகரிப்பு FAB (Fluidized Aerobic Bio-Reactor) தொழில் நுட்பத்தில் ரூ.17.76 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு தற்போது தினசரி 32 MLD கழிவுநீர் சுத்திகரிக்கப்படுகிறது.



### அணைமேடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலத்திற்கு உட்பட்ட அணைமேடு பகுதியில் 1.04 ஏக்கர் (New S.F No.65/2, 66, 65/2,65/3) பரப்பளவில் தினசரி 6 MLD அளவிற்கு, கழிவுநீர் சுத்திகரிப்பு FAB-MBBR (Moving Bed Bio Reactor) தொழில் நுட்பத்தில் ரூ.5.79 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு தற்போது தினசரி 5 MLD கழிவுநீர் சுத்திகரிக்கப்படுகிறது.

மாநகரில் பாதாள சாக்கடை திட்டத்தில் விடுபட்ட பகுதிகளில் சேலம் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் மதிப்பீடு தொகை ரூ.111.00 கோடிக்கு மூன்று சிப்பங்களாக 93.00 கி.மீ நீளத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு. தற்போது அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.



## நீர் நிலைகள் மேம்பாடு

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ் கண்டுள்ள விபரப்படியான 12 எண்ணிக்கையிலான நீர் நிலைகள் உள்ளன. இதில் 3 எண்ணிக்கையிலான நீர் நிலைகள் மாநகராட்சிக்கு சொந்தமானது, இதுதவிர மீதமுள்ள 9 நீர்நிலைகள் வருவாய் துறை மற்றும் பொதுபணித்துறைக்கு சொந்தமானது. அதன் விபரங்கள் முறையே,

| வ. எண் | நீர் நிலைகள் விபரம் | பரப்பளவு ஏக்கரில் | உரிமை விபரம் |
|---|---|---|---|
| 1 | பனமரத்துப்பட்டி ஏரி | 2139 | சேலம் மாநகராட்சி |
| 2 | குமரகிரி ஏரி | 39.25 | சேலம் மாநகராட்சி |
| 3 | சத்திரம் தெப்பக்குளம் | 0.92 | சேலம் மாநகராட்சி |
| 4 | போடிநாயக்கன்பட்டி ஏரி | 20.26 | வருவாய் துறை |
| 5 | மூக்கனேரி | 80.26 | பொதுப்பணித்துறை |
| 6 | அல்லிகுட்டை | 20.25 | வருவாய் துறை |
| 7 | அம்மாள் ஏரி | 8.40 | வருவாய் துறை |
| 8 | பள்ளப்பட்டி ஏரி | 44.38 | வருவாய் துறை |
| 9 | இஸ்மாயில் கான் ஏரி | 16.19 | வருவாய் துறை |
| 10 | இராமன் குட்டை | 14.84 | வருவாய் துறை |
| 11 | கொள்ளன் குட்டை | 3.93 | வருவாய் துறை |
| 12 | சீலாவரி ஏரி | 21.21 | வருவாய் துறை |

சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மொத்தம் 12 எண்ணிக்கையிலான ஏரிகளில் தற்போது 8 எண்ணிக்கையிலான நீர்நிலைகளை புனரமைப்பு மற்றும் மேம்பாடு செய்யும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்கால சந்ததிகள் பயன்பெறும் வகையில் சுற்றுச் சூழல் மாறுபடாமல் பாரம்பரியமாக உள்ள ஏரிகளை மறுசீரமைத்து, மழைநீரை சேகரித்து, நீர் நிலைகள் சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் பெருக்கும் நோக்கில் பனமரத்துப்பட்டி ஏரிக்கு ரூ.54.00 கோடிக்கும் மற்றும் இஸ்மாயில்கான் ஏரிக்கு ரூ.42.00 கோடிக்கும் ஆகிய 2 எண்ணிக்கையிலான நீர் நிலைகளை புனரமைப்பு செய்ய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்ட பிரேரனையை அரசுக்கு அனுப்பி வைத்து உரிய நிதி பெற்று எதிர்வரும் நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2024 – 2025 ஆம் நிதியாண்டு அறிவிப்பின் மீது எடுக்கப்பட்ட நடவக்கைகள் விவரம்

| வ. எண் | திட்ட அறிவிப்புகள் | எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|
| 1. | பருவ காலங்களில் வெள்ள நீரால் பாதிக்கப்படுகின்ற பகுதிகளுக்கு ரூ.65.00 கோடி மதிப்பில் சாக்கடை வசதி செய்தல் | மழைநீர் வடிகால் அமைக்க மதிப்பீடு ரூ.140.00 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, 08.01.2025ம் தேதி நகராட்சி நிர்வாக இயக்குநரத்தில் சமர்பிக்கப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது. |
| 2. | நாய்களுக்கான அறுவை சிகிச்சைக்கான கூடுதல் கட்டிடம் கட்டுதல் ரூ.2.00 கோடி | செட்டிச்சாவடியில் புதியதாக அறுவை சிகிச்சைக்கான கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு மதிப்பீடு தொகை ரூ.2.20 கோடிக்கு, 30.11.2024ம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது. |
| 3. | OSR இடங்களை கணினி மயமாக்குதல் | சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட காலி திறவிடங்களின் விபரங்கள் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரை படி வரும் 2025 – 2026 ஆம் நிதி ஆண்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திட்ட ஆலோசகர் மூலம் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| 4. | கோட்டம் எண்.44ல் குடிநீர் மேல்நிலைத் தொட்டி அருகில் மாநகராட்சி இடத்தில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் | மேல்நிலைத் தொட்டி வளாகத்தில் பேவர் பிளாக் அமைத்தல், மின் விளக்குகள் 8 எண்ணிக்கை மற்றும் CCTV Camera 8 எண்ணிக்கையில் மதிப்பீடு தொகை ரூ.0.40 கோடியில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| 5. | ஏடிசி நகர் முதல் டிவிஎஸ் பாலம் வரை உள்ள வரட்டாறு பாலம் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் ரூ.57.00 இலட்சம் | மதிப்பீடு தொகை ரூ.2.18 கோடிக்கு முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு 20.11.2024ம் தேதி சமர்பிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. |

## 2024 – 2025 ஆம் நிதியாண்டு அறிவிப்பின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம்

| வ. எண் | திட்ட அறிவிப்புகள் | எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|
| 6. | ஐந்து தியேட்டர் பின்புறம் உள்ள ஆலமரத்துக்காடு அருகில் புதிய பாலம் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்தல் | பாலம் அமைக்கும் பணிக்கு திட்ட வரைவு தொழில்நுட்ப ஆலோசகர் வழியாக தயார் செய்யப்பட்டு மேல் நடவடிக்கையில் உள்ளது. |
| 7. | மூலப்பிள்ளையார் கோயில் ஓடை ரூ.70.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்தல் | ஓடை சீரமைக்கும் பணிக்கு திட்ட வரைவு தொழில்நுட்ப ஆலோசகர் வழியாக திட்ட வரைவு தயார் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. |
| 8. | நெய்மண்டி அருணாச்சலம் தெரு முதல் செவ்வாய்பேட்டை இணைப்பு பாலம் திருமணிமுத்தாறு இடையே ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் பாலம் சீரமைத்தல். | திட்ட மதிப்பீடு தயார் செய்து மேல் நடவடிக்கையில் உள்ளது |
| 9. | நெய்மண்டி அருணாச்சலம் தெரு முதல் செவ்வாய்பேட்டை இணைப்பு பாலம் திருமணிமுத்தாறு இடையே ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் பாலம் சீரமைத்தல். (சீரங்கன் தெரு). | திட்ட மதிப்பீடு தயார் செய்து மேல் நடவடிக்கையில் உள்ளது |
| 10. | கொண்டலாம்பட்டி பழைய சுடுகாடு பகுதியில் மின் மாயனம் அமைத்தல் ரூ.3.00 கோடி | திட்ட மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு மேல் நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| 11. | நான்கு வார்டு அலுவலகங்களுக்குட்ட மாநகராட்சிக்கு சொந்தமான 1/2 ஏக்கர் முதல் 1 ஏக்கர் உள்ள ஏதேனும் ஒரு காலி இடத்தினை கண்டறிந்து அப்பகுதியினை விற்பனை மண்டலம் (Vending Zone) பகுதியாக அறிவித்தல். | இராஜேந்திரா சத்திரம், ஐந்து ரோடு சந்திப்பு ரிலையன்ஸ் மால் அருகில், அஸ்தம்பட்டி காவல் நிலையம் எதிரில் உள்ள கொல்லங்குட்டை ஏரிப் பகுதி, வீராணம் மெயின் ரோடு வாய்க்கால் பட்டறை குப்பை மேடு பகுதி, கடலூர் மெயின் ரோடு வ.உ.சி நகர் பகுதி, கருங்கல்பட்டி அம்மா உணவம் அருகில், சீலநாய்க்கன்பட்டி தாட்கோ அலுவலகம் அருகில், மணியனூர் சந்தைப் பகுதி, கொண்டலாம்பட்டி சந்தைப் பகுதி ஆகிய 9 இடங்கள் தேர்வு செய்யப்பபட்டு விற்பனை மண்டலமாக (Vending Zone) அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. |
| 12. | புதியதாக வருமானம் தரக்கூடிய இடங்களை கண்டறிந்து கட்டிடம் கட்டி அதன் மூலம் வருமானம் ஈட்டுதல். | திட்ட மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு மேல் நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

## 2024 – 2025 ஆம் நிதியாண்டு அறிவிப்பின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம்

| வ. எண் | திட்ட அறிவிப்புகள் | எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|
| 13. | மாநகராட்சி பள்ளிகளை நவீன மயமாக்குதல் ரூ.20.00 கோடி | SFC நிதியின் கீழ் ரூ. 5.27 கோடியில் புதிய கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பணிகள் 27 எண்ணிக்கைகளில் நடைபெற்று வருகிறது. |
| 14. | சந்தைப் பேட்டை வணிக வளாகத்தனை இடித்துவிட்டு நவின முறையில் வணிக வளாகம் கட்டுதல் | மதிப்பீடு தொகை ரூ.58.00 கோடிக்கு முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு 08.01.2025 ம் தேதி சமர்பிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. |
| 15. | நகரில் அகலமாக உள்ள சாலைகளில் பசுமை வெளி சாலைகளை உருவாக்குதல் | நகரில் உள்ள அகலமாக உள்ள சாலைகள் மேம்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பசுமை பணிகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| 16. | தாதம்பட்டி மயானத்தில் எரிவாயு தகன மேடை அமைத்தல் ரூ.3.00 கோடி | திட்ட மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| 17. | இராமநாதபுரம் ஓடை வடிகால் வசதி ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துதல். | மழைநீர் வடிகால் திட்ட மதிப்பீடு தொகை ரூ.140.00 கோடியில் இப்பணி சேர்க்கப்பட்டுள்ளது. |
| 18. | கோட்டம் எண்.58க்கு உட்பட்ட ஒன்பதாம்பாலி பகுதியில் கழிப்பிடம் அமைக்க அமைத்தல் ரூ.50.00 இலட்சம் | 2024 – 25ம் நிதியாண்டில் CT & PT நிதியின் கீழ் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. |
| 19 | கோட்டம் எண்.45க்கு உட்பட்ட சலவையர் காலனியில் இணைப்புப் பாலம் அமைத்தல் ரூ.25.00 இலட்சம். | மழைநீர் வடிகால் திட்ட மதிப்பீடு தொகை ரூ.140.00 கோடியில் இப்பணி சேர்க்கப்பட்டுள்ளது. |
| 20. | மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களான OSR பட்டா நிலங்கள் போன்றவற்றை கண்டறிந்து அவற்றை முள்வேலி அமைத்து பாதுகாத்தல் ரூ.10.00 கோடி | மாவட்ட ஆட்சியர் சேலம் அவர்களின் அதிகார வரம்புக்கு உட்பட்டு சென்ற ஆண்டு ஒரு கோடி ரூபாய் அளவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றது. இனி பல்வேறு அரசு திட்டங்களின் வாயிலாக மீதமுள்ள பகுதிகளில் முள்வேலி அமைக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## அம்ரூத் திட்டம் 2.0

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **11.12.2021** ஆம் தேதியன்று சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழக்கும் விழாவில் சேலம் மாவட்டத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு முக்கியத் திட்டங்களை அறிவித்தார்.

சேலம் மாநகராட்சியில் பாதாளச் சாக்கடை வசதி இல்லாத பகுதிகளில் **530** கோடி ரூபாய் செலவில், **520** கிலோ மீட்டர் நீளத்திற்கு பாதாளச் சாக்கடை அமைக்கும் பணிகளும், கழிவு நீர் உந்து நிலையங்கள், சுத்தகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணிகளும் செயல்படுத்தப்படும்.

அதன்படி சேலம் மாநகராட்சி அம்ரூத் **2.0** திட்டத்தின்கீழ், விடுபட்ட மற்றும் புதியதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு, பாதாள சாக்கடை அமைக்கும் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை அரசாணை (பல்வகை) எண். ந.நி.கு.வ. (மா.ந.–2) துறை, நாள்: 09.09.2022 ன்படி நிர்வாக அனுமதி, மற்றும் தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களின் கடிதம் Roc.No.18484/2023/DO1, Dated: 21.07.2023 ல் தொழில் நுட்ப அனுமதியும் பெறப்பட்டு இப்பணியினை கீழ்காணும் விபரப்படி நான்கு சிப்பங்களாக பிரித்து **16.11.2023** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பெறப்பட்டது.

| Sl.No. | Name of work Tender | put value (in Crore) |
|---|---|---|
| 1 | Under Ground Sewerage System to uncovered areas in Zone I Ward No. 20, 21, 22, 24 Salem City Municipal Corporation (Package- 1) | 95.78 |
| 2 | Under Ground Sewerage System to uncovered areas in Zone I, Ward No. 1,2,3,23,24 & 25, Zone II, Ward No. 4, 5, Zone –III Ward No. 50,51,54,57,58,59 in Salem City Municipal Corporation (Package- 2) | 113.33 |
| 3 | Under Ground Sewerage System to uncovered areas Zone -IV, Ward No. 58, 59, 60 in Salem City Municipal Corporation (Package- 3) | 164.74 |
| 4 | Underground Sewerage System to uncovered areas in Zone -I Ward No.1, Zone -II Ward No. 6,7,8,12, Zone -III Ward no. 9, 36, 37, 38 in Salem City Municipal Corporation (Package- 4) | 174.15 |

மேற்காணும் விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் சிப்பம்–**1** மற்றும் சிப்பம்–**2**ற்கு **05.03.2024** அன்று பணி ஆணை வழங்கி பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் நாளதுவரை **40** கி.மீ. அளத்திற்கு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்காக ரூ.**23.00** கோடி ரூபாய் செலவிடப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## சீர்மிகு நகரம் (Smart City)

மத்திய அரசின் சீர்மிகு நகரம் (Smart City) திட்டத்தில் நாடு முழுவதும் தேர்வு செய்யப்பட்டுள்ள 100 நகரங்களில் தமிழ்நாட்டில் சேலம் மாநகராட்சி உள்பட 12 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. 31.07.2015 அன்றைய நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) அரசு ஆணை எண்.112ன் படி இத்திட்டத்தினை செயல்படுத்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சீர்மிகு நகரம் (Smart City) திட்டத்தில் 2–ஆம் கட்ட தேர்விற்காக நகர அளவிலான கொள்கை திட்ட வரைவு (City Level Conceptual Plan) தயார் செய்யப்பட்டு 30.06.2016 அன்று மத்திய நகர்ப்புற அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சீர்மிகு நகரம் திட்டத்திற்கு சேலம் மாநகராட்சி தேர்வு செய்யப்பட்டுள்ளதாக 20.09.2016 அன்று மத்திய நகர்ப்புற அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டம் சேலம் மாநகராட்சியில் இரண்டு பிரிவுகளாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

### பகுதி அடிப்படையிலான அபிவிருத்தி செய்தல் (Area Based Development)

சேலம் மாநகரில் பகுதி அடிப்படையிலான அபிவிருத்தி செய்தல் திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசின் வழிகாட்டுதலின்படியும், சேலம் மாநகர மக்களின் கருத்து வாக்கெடுப்பு மற்றும் திட்ட ஆலோசகரின் தள ஆய்வு மற்றும் தரவுகளின் படியும், பழைய பேருந்து நிலையம், சாலை வடிவமைப்பு மற்றும் மறு வடிவமைப்பு பணிகள், வணிக வளாகங்கள் அபிவிருத்தி, வ.உ.சி. நாளங்காடி புதுப்பித்தல், திருமணி முத்தாறு அபிவிருத்தி திட்டம், போஸ் மைதானம் அபிவிருத்தி பணிகள், மழைநீர் வடிகால் அமைத்தல், திடக் கழிவு மேலாண்மை, குடிநீர் வசதி பகுதிகளை உள்ளடக்கி 7.15 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட பகுதி தேர்வு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய தேவைகளை உள்ளடக்கிய முழுமையான உட்கட்டமைப்புகள் உருவாக்கிட விரிவான திட்ட அறிக்கைகள் தயார் செய்து உரிய அனுமதிகள் பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு தற்போது பணிகள் 95 சதவீதம் முடிவுற்றது.

### நகர் முழுமைக்கான திட்டம் (Pan City)

சேலம் மாநகராட்சியில் அனைத்து பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தின் கீழ், நகர் முழுமைக்கும் மின் ஆளுமை மூலம் செயலமைப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. கணினி மூலம் போக்குவரத்து மேலாண்மையினை கையாளுதல், பாதுகாப்பான வாகன நிறுத்துமிடங்களை அமைத்தல், கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல், தெரு விளக்குகளை கண்காணிப்பு செய்தல் உள்ளிட்ட வசதிகளை கண்காணித்திட ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறை (Integrated Command and Control Centre) அமைத்தல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

| திட்ட விவரம் | எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| பணிகள் முடிக்கப்பட்டது | 100 | 794.52 |
| செயல்பாட்டில் உள்ள பணிகள் | 03 | 170.48 |
| **மொத்தம்** | **103** | **965.00** |

அதன்படி சேலம் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசிடமிருந்து ரூ.490.00 கோடியும் (திட்டங்களுக்கான தொகை ரூ.465.00 கோடி, நிர்வாகம் மற்றும் அலுவலக செலவினத் தொகை ரூ.25.00கோடி) மாநில அரசிடமிருந்து ரூ.500.00 கோடியும் பெறப்பட்டு, மேற்படி இத்தொகையில் நாளது வரை ரூ. 952.74 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசு ஆணை எண்.174 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (எம்ஏ–2) துறை, நாள்:01.12.2016–ன்படி, தற்பொழுது 2024–2025ம் நிதியாண்டிற்கு கீழ்கண்டுள்ள விபரப்படி புதியதாக தலைவர் மற்றும் இயக்குநர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

| வ. எண் | விபரம் | பதவி |
|---|---|---|
| 1 | **திரு.கிரண் குர்ராலா**, இ.ஆ.ப.,<br>பேரூராட்சிகள் இயக்குநர்,<br>நகராட்சி நிர்வாக இயக்குநரக வளாகம், சென்னை | தலைவர் |
| 2 | திருமதி. **P.A. பரிமளா செல்வி,**<br>இணை செயலாளர், நிதித்துறை, சென்னை. | இயக்குநர் |
| 3 | திரு. **ரஞ்ஜீத் சிங்,** இ.ஆ.ப..,<br>ஆணையாளர், சேலம் மாநகராட்சி | மேலாண்மை இயக்குநர் |
| 4 | திரு. **R. செந்தில்குமார்**, எம்.இ.,<br>மாநகர பொறியாளர்(பொ), சேலம் மாநகராட்சி | இயக்குநர் |
| 5 | திரு. **R. தமிழ்வேந்தன்**,எம்.ஏ.,<br>உதவி ஆணையாளர், ( கணக்கு ) சேலம் மாநகராட்சி | இயக்குநர் |

மேற்படி பெறப்பட்ட தொகையில் நாளதுவரை ரூ.952.74 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் நடைபெற்று வரும் அனைத்து பணிகளும் 2024–2025ம் நிதியாண்டில் முடிக்கப்பட உள்ளது.

# பொது சுகாதார பிரிவு

**மாநகராட்சி சுய விபரம் :**

| வ.எண் | திடக்கழிவுகளின் வகைகள் | அளவு - மெ.டன் |
|---|---|---|
| 1 | மக்கும் கழிவு | 319 |
| | **மக்காத கழிவுகள்** | |
| 2 | மறுசுழற்சி செய்யக்கூடியவை | 99 |
| 3 | மறுசுழற்சி செய்ய முடியாதவை | 49.50 |
| 4 | சாக்கடைகள் | 55 |
| 5 | மற்றவை | 27.5 |
| | மொத்தம் | 550 |

| வ.எண் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் | 16 |
| 2 | நகர்ப்புற நலவாழ்வு மையம் | 25 |
| 3 | அம்மா உணவகம் | 11 |
| 4 | தூய்மை பணியாளர்கள் | 665 |

## திடக்கழிவு மேலாண்மை விபரம்

சேலம் மாநகராட்சியானது 91.34 ச.கி.மீ பரப்பளவில் நான்கு மண்டலங்களாகவும், 60 கோட்டங்களாகவும் உள்ளன. 2022ஆம் ஆண்டின் மக்கள் தொகை மதிப்பீட்டின்படி 10,83,625 மக்கள் தொகையையும் 2,38,624 குடியிருப்புகளையும் 25,457 வணிக நிறுவனங்களையும், 8 தினசரி சந்தைகள், 2 பேருந்து நிலையங்கள், தெற்கு இரயில்வே கோட்டம், ஒரு இரயில்வே சந்திப்பு, ஒரு டவுன் இரயில் நிலையம், லீ–பஜார் என்ற பெரிய அளவிலான உணவு தானியங்கள் விற்பனை மையம் மற்றும் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் சிறப்பு பல்நோக்கு மருத்துவமனை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒன்றாகும். மேலும், இம்மாநகருக்கு வெளியூரிலிருந்து தினசரி சுமார் ஒரு இலட்சம் மக்கள் வந்து செல்கின்றனர். இதனால் நாள் ஒன்றுக்கு சுமார் 550 மெ.டன் திடக்கழிவுகள் உருவாகிறது.

இம்மாநகராட்சியில் சேகரிக்கப்படும் திடக்கழிவுகளை கையாள மாநகர எல்லைக்குள் போதிய இடவசதி இல்லாததால் மாநகரின் மையப் பகுதியிலிருந்து சுமார் 16 கி.மீ. தொலைவில் உள்ள சொட்டிச்சாவடி கிராமத்தில் அரசாணை (எம்.எஸ்) எண்.127 வருவாய் துறை நாள்:13.03.2007 ன்படி கைவிடப்பட்ட சுரங்கப் பகுதியில் 100 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு சேலம் மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளது.

**நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையம்** (Micro Composting Centre)

சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தினந்தோறும் 550 மெ.டன் கழிவுகள் உற்பத்தியாகின்றன. இவற்றில் 319 மெ.டன் மக்கும் கழிவுகள் உருவாகின்றன. மக்கும் கழிவுகளை செயலாக்கம் செய்ய 34 எண்ணிக்கையிலான நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையம் செயல்பாட்டில் உள்ளது.




இதன் மூலம் நாளொன்றுக்கு சுமார் 170 மெ.டன் மக்கும் கழிவுகள் செயலாக்கம் செய்யப்பட்டு உரமாக்கப்படுகிறது.

**உலர் கழிவு சேகரிப்பு மையம்** (Material Recovery Facilities centre)

சேலம் மாநகராட்சி பகுதிகளில் உருவாகும் உலர்கழிவுகளை செயலாக்கம் செய்ய 5 எண்ணிக்கையிலான உலர் கழிவு சேகரிப்பு மையங்கள் 425 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு அவற்றில் தற்போது 2 மையங்கள் பயன்பாட்டில் உள்ளது. இவற்றில் நாளொன்றுக்கு சுமார் 20 மெ.டன் உலர்கழிவுகள் செயலாக்கம் செய்யப்படுகிறது.

## தூய்மை இந்தியா திட்டம் 2.0

### பொருள் மீட்பு மையம் (Material Recovery Facilities)

தூய்மை இந்தியா திட்டம் 2.0 (2023–2024) ன் கீழ் ரூ.5.10 கோடி மதிப்பீட்டில் 2 எண்ணிக்கையில் பொருள் மீட்பு மையம் அமைக்க அனுமதிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

### தூய்மை இந்தியா திட்ட மனிதவளம்

சேலம் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் குறித்த விழிப்புணர்வு மேற்கொள்ள தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 30 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 ஒருங்கிணைப்பாளர் என மொத்தம் 35 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களுக்கான ஊதியம் ஆண்டு ஒன்றிற்கு ரூ 73.84 லட்சம் மதிப்பீட்டில் தூய்மை இந்தியா திட்டம் IEC நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

### திடக்கழிவு மேலாண்மை பயனர் கட்டணம் (SWM User Charge)

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு திடக்கழிவு மேலாண்மை பயனர் கட்டணமாக 2024–2025 ஆம் ஆண்டில் ரூ.11.81 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை பயனர் கட்டணம் செலுத்தாத வணிக நிறுவனங்கள் மற்றும் திருமண மண்டபங்களுக்கு ஏப்ரல் 2024 முதல் ஜனவரி 2025 வரை ரூ.1,15,650 அபராதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளது.

### திடக்கழிவு மேலாண்மை அபராதம் (Solid Waste Penalty)

சேலம் மாநகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை விதிகளை மீறும் பொதுமக்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் மீது அபராதம் விதிக்கப்படுகிறது. அதன்படி ஏப்ரல் 2024 முதல் ஜனவரி 2025 வரை ஒரு முறைபயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பைகள் விற்பனை செய்த வணிக நிறுவனங்களுக்குரூ 1,69,400 அபராதம் மற்றும் திடக்கழிவுகளை தரம் பிரித்து வழங்காத பொதுமக்களுக்கு ரூ.30,100 அபராதம் விதிக்கப்பட்டது.

### தொழில் வர்த்தக உரிமம் (Trade License)

சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வணிக நிறுவனங்கள் மாநகராட்சியில் வர்த்த உரிமம் பெற வேண்டும். அதன் படி ஏப்ரல் 2024 முதல் ஜனவரி 2025 வரை 17098 எண்ணிக்கையிலான வணிக நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டு ரூ.97,89,014 தொகை வசூலிக்கபட்டுள்ளது. தற்போது தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 – ன் படி சேலம் மாநகராட்சியில் புதியதாக தொழில் வரி நிர்ணயம் செய்து மாமன்றத்தால் அனுமதிக்கப்பட்டதை நகராட்சி நிர்வாக இயக்குநரக ஒப்புதல் பெற்று நடைமுறைபடித்திட மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## நெகிழி ஒழிப்பு மற்றும் மீண்டும் மஞ்சப்பை இயக்கம்

அரசாணை (எம்.எஸ்) எண். 84 சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை நாள் : 25.06.2018 ன்படி சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 01.01.2019 முதல் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்த கீழ்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றாக துணிப்பையை பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் விதமாக, "மீண்டும் மஞ்சப்பை" என்ற இயக்கம் துவக்கப்பட்டு, தூய்மை இந்தியா திட்ட மக்கள் இயக்கத்தின் நிகழ்வாக மஞ்சள் பை பயன்பாட்டை வலியுறுத்தி பதாகைகள் தாங்கிய பேரணியும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும்தொடர்ந்து நடத்தப்பட்டுவருகிறது.

- இலகு ரக வாகனங்களில் பதாகைகள் மற்றும் ஒலி பெருக்கிகள் அமைத்து "மீண்டும் மஞ்சபை" குறித்த பிரச்சாரங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- பேருந்து நிலையங்களிலும், அரசு பொருட்காட்சியிலும் பொதுமக்களுக்கு ""மீண்டும் மஞ்சபை" குறித்த விழிப்புணர்வு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டது.
- இம்மாநகராட்சியின் மாமன்ற உறுப்பினர்கள் தங்கள் பகுதியில் உள்ள பொதுமக்கள் அதிகம் கூடுமிடங்களான, சந்தைகள், மார்க்கெட்கள் போன்ற இடங்களில் தங்களது சொந்த செலவில் மஞ்சள் பைகளை வழங்கி மீண்டும் மஞ்சள் பையை பயன்படுத்துமாறும், பிளாஸ்டிக் பைகளை தவிர்க்குமாறும் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொண்டுள்ளனர்.
- உணவகங்கள், ஜவுளி கடைகள், பலசரக்கு கடைகள், பேக்கரிகள், தேநீர் விடுதிகள், சாலையோர உணவகங்களில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தக்கூடாதென அறிவுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- நெகிழி பைகளுக்கு மாற்றாக மரவள்ளிக் கிழங்கில் இருந்து தயார் செய்யப்பட்ட மட்கும் தன்மை கொண்ட பைகளை அறிமுகப்படுத்தி அதனை பயன்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் விழிப்புணர்வு பயிலரங்கங்கள் நடத்தப்பட்டு, தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதற்கு எதிராக மாணவ மாணவியர் உறுதிமொழி எடுத்துக்கொண்டுள்ளனர்.
- பொதுமக்கள் அதிகமாக கூடும் பழைய பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையம் போன்ற இடங்களில் விழிப்புணர்வு இயக்கங்கள் நடத்தப்பட்டு, அதில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக மட்கும் தன்மை கொண்ட பொருட்களை பயன்படுத்துமாறு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.
- தடை செய்யப்பட்ட பொருட்களை பயன்படுத்தினாலோ, விற்பனை செய்தாலோ கடை உரிமையாளருக்கு அபராதம் விதிக்கப்படுவதுடன், கடை உரிமம் இரத்து செய்யப்படும் என அறிவித்து மாநகராட்சி நிர்வாகம் மூலம் நாளிதழ்களில் அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது.

- ஜவுளி கடைகளில் துணி மற்றும் சனல் பைகளை மட்டுமே பயன்படுத்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதில், கடையின் உரிமையாளர்கள் பணியாளர்கள் ஆகியோர் பிளாஸ்டிக் தடை உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.
- அரசு அலுவலகங்கள், மருத்துவ மனைகள், பள்ளி மற்றும் கல்லூரிகளில் பிளாஸ்டிக் தடை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

சேலம் மாநகராட்சியில் வார்டு அலுவலகத்திற்கு 4 குழுக்கள் என 12 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் நாள்தோறும் பிளாஸ்டிக் உற்பத்தி தொழிற்கூடங்கள், குடோன்கள், கடைகள் ஆகிய இடங்களில் சோதனை நடத்தி வருகின்றனர். 2024–2025 ஆம் ஆண்டில் ஜனவரி 2025 வரை927 கிலோ எடை கொண்ட தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை விற்பனையாளர்கள் மற்றும் பொது மக்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டு ரூ.2,25,700/– அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.



மேலும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதை தடுக்கும் நோக்கில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் சேலம் மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தெரு நாய்கள் இனப்பெருக்க கட்டுபாட்டு அறுவை சிகிச்சை பணிகள் மற்றும் வெறிநோய் தடுப்பூசி செலுத்தும் முகாம்கள் நடத்துதல்.**

சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருக்களில் சுற்றித்திரியும் தெரு நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும், ரேபீஸ் வெறிநாய்கடி நோய் பரவுவதைத் தடுக்கவும் தெருக்களில் சுற்றித்திரியும் தெருநாய்கள் பட்டர்ஃபிளை வலைகள் கொண்டு பிடிக்கப்பட்டு, இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, ரேபிஸ் வெறிநோய் தடுப்பூசி செலுத்தி, பராமரிப்பிற்கு பின் பிடிக்கப்பட்ட இடத்திற்கே கொண்டு சேர்க்கப்படுகிறது. இதற்காக வாய்க்கால் பட்டறை பகுதியில் ஒரு அறுவை சிகிச்சை மையமும், சிறப்புற வடிவமைக்கப்பட்ட "நாய்கள் பயணிக்கும்" வாகனங்கள் நான்கும் பயன்பாட்டில் உள்ளது. நடப்பு நிதியாண்டில் செவ்வாய்பேட்டையில் கூடுதலாக ஒரு அறுவை சிகிச்சை மையம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

பிராணிகள் இனப்பெருக்க கட்டுப்பாட்டு விதி 2023 ல் தெரிவிக்கப்பட்டவாறு கருத்தடை செய்யப்படும் நாய் ஒன்றிற்கு ரூ.1650/– (நாய் பிடிப்பதற்கு ரூ.200/– மற்றும் கருத்தடை அறுவை சிகிச்சை சம்மந்தமான பணிகளுக்கு ரூ.1450/–) கட்டாயமாக வழங்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதின் பேரில், தற்போது யூனிட் ஒன்றிற்கு ரூ.1650/– என்ற அடிப்படையில் புளூ கிராஸ் ஆப் இந்தியா தொண்டு நிறுவனத்தின் மூலம் தெரு நாய்களுக்கு இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

| ஆண்டு | ஜனவரி | பிப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜுன் | ஜுலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2021 | 0 | 18 | 50 | 10 | 13 | 2 | 40 | 22 | 46 | 62 | 131 | 303 | 695 |
| 2022 | 158 | 247 | 286 | 210 | 251 | 277 | 126 | 254 | 403 | 522 | 264 | 171 | 3169 |
| 2023 | 296 | 168 | 233 | 254 | 239 | 258 | 315 | 504 | 642 | 689 | 462 | 611 | 4668 |
| 2024 | 650 | 845 | 718 | 754 | 703 | 747 | 943 | 833 | 944 | 1020 | 933 | 1012 | 10102 |
| மொத்தம் | 1104 | 1278 | 1287 | 1228 | 1206 | 1282 | 1424 | 1613 | 2035 | 2290 | 1790 | 2097 | 18634 |

சேலம் மாநகராட்சியில் 2021–ம் ஆண்டில் 695 எண்ணிக்கையிலும், 2022–ஆம் ஆண்டில் 3169 எண்ணிக்கையிலும் 2023 –ம் ஆண்டில் 4668 எண்ணிக்கையிலும் 2024 ம் ஆண்டில் 10,102 எண்ணிக்கையிலுமாக மொத்தம் 18,634 தெருநாய்களுக்கு இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.








பிராணிகள் இனப்பெருக்க கட்டுபாட்டு (நாய்கள்) விதிகள்2023 ன்படி தெருநாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை கண்காணித்திட சேலம் மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பிராணிகள் நல ஆர்வலர்களை உள்ளடக்கிய கண்காணிப்பு குழு மற்றும் பிராணிகள் உறுப்பு ஆய்வுக்குழு சேலம் மாநகராட்சியில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மாநகராட்சியில் தெருநாய்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை கட்டுப்படுத்திட, இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சையினை மேலும் கூடுதலான எண்ணிக்கையில் அதிகரிக்க மாதம் ஒன்றிற்கு 1200 என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் போது அனைத்து நாய்களுக்கும் ரேபீஸ் தடுப்பூசி போடப்படுகிறது. ஆனால், தொடர்ச்சியாக ஆண்டுக்கொரு முறை ரேபீஸ் தடுப்பூசி போட வேண்டியதின் அவசியம் கருதி சேலம் மாநகராட்சி மற்றும் ரெஸ்கியூயிங் அனிமல் இன்நீட் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனமும் இணைந்து ஒவ்வொரு புதன்கிழமையும் ஒரு கோட்டத்தில் 2 இடங்களில் ரேபீஸ் தடுப்பூசி முகாம் நடத்த முடிவு செய்யப்பட்டு 26.06.2024 அன்று தொடங்கப்பட்டு நாளதுவரை தொடர்ச்சியாக தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டு, ஜனவரி 2025 வரை 4658 தெரு நாய்களுக்கும், வீட்டில் வளர்க்கப்படும் நாய்களுக்கும் விலையில்லா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

### தூய்மை பணியாளர்கள் நலத் திட்டப் பணிகள்

சேலம் மாநகராட்சியில் நாள்தோறும் உருவாகும் 550 மெட்ரிக்டன் திடக்கழிவுகளை கையாள புற ஒப்படைப்பு முறையில் திடக்கழிவுமேலாண்மை பணிகளை மேற்கொள்ள திருவாளர்கள். ஆர்.எஸ்.கே. டெக்டிரேடர்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. அந்நிறுவனத்திற்கு டன் ஒன்றிற்கு ரூ 3551.35 வழங்கப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சியில் நிரந்தர தூய்மை பணியாளர்கள் 335 ஆண்களும், 330 பெண்களும் என மொத்தம் 665 பணியாளர்களும், புறஒப்படைப்பு பணியாளர்களில் 703 ஆண்களும், 905 பெண்களும் என மொத்தம் 1608 பணியாளர்களும் ஆக மொத்தம் 2273 பணியாளர்கள் திடக்கழிவு மேலாண்மை பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### தூய்மை பணியாளர்களுக்கு தூய்மை பணியாளர் நல வாரிய அட்டை

சேலம் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் ஈடுபட்டுவரும் 1000 தனியார் தூய்மை பணியாளர்களுக்கு, தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விபத்துக் காப்பீடு, இயற்கை மரண உதவி, ஈமச்சடங்கு உதவி, கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, கண்கண்ணாடி வாங்கிட நிதி உதவி மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகளைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### தூய்மை பணியாளர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்

சேலம் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் ஈடுபட்டுவரும் 1227 எண்ணிக்கையிலான தனியார்துய்மை பணியாளர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்ட அட்டைகள் பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் கட்டணமின்றி அங்கீகரிக்கப்பட்ட தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சை பெற வழி வகை செய்யப்பட்டுள்ளது.

### பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தளவாடப் பொருட்கள்

சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட 60 கோட்டங்களிலும் பணிபுரியும் நிரந்தரதூய்மை பணியாளர்களுக்கு பாதுகாப்பாகவும், சிறப்பாகவும் பணியாற்றிட தேவையான சீருடைகள், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தளவாடப்பொருட்கள் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து வழங்கப்பட்டது.



சேலம் மாநகராட்சியிலன் நேருகலையரங்கில் **06.12.2024** அன்று நடைபெற்ற பாபாசாஹிப் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாள் விழவின் போது தூய்மைப் பணியாளர்களுக்கு மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களால் ரூ.**20.00** இலட்சம் மதிப்பீட்டில் மழைகோட், மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டது.

## டெங்கு காய்ச்சல் கட்டுப்படுத்துதல்

சேலம் மாநகராட்சியால் தீவிரமாக மேற்கொள்ளப்பட்ட டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளால் நடப்பாண்டில் இக்காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக **2024–2025** ஆம் நிதியாண்டில் ஏப்ரல் **2024** முதல் ஜனவரி **2025** வரை **132** நபர்கள் மட்டுமே இந்நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று குணமடைந்துள்ளனர்.

இம்மாநகராட்சியின் **60** கோட்டங்களுக்கும் டெங்கு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுவினை சார்ந்த **700 DBC** பணியாளர்கள் நாள்தோறும் வீடு வீடாக சென்றும், தொழில், வணிக பகுதிகளுக்கு சென்றும் ஆய்வு செய்து கொசுப்புழு வளர்நிலைகளை கண்டறிந்து அழிக்கும் பணிகள் மேற்கொண்டு வருகின்றனர். இதன் காரணமாக டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஎஸ் கொசு உற்பத்தியாகாமல் தடுக்கப்படுகிறது. மழைக்காலங்களில் மழை நீர் தேங்கும் பகுதிகளில் உள்ள பழைய டயர்கள், உடைந்த பிளாஸ்டிக் பொருட்கள், சிமெண்ட் தொட்டிகள், உரல்கள் மற்றும் இது போன்ற மழைநீர் தேங்கும் அமைப்புடைய தேவையற்ற பொருட்களை அகற்றம் செய்வதால் டெங்கு கொசு உற்பத்தியாகாமல் தடுக்கப்படுகிறது.

இம்மாநகராட்சியில் டெங்கு நோய்தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்காக வாகனத்தில் பொருத்தப்பட்ட கொசுப்புகை தெளிப்பான் இயந்திரங்கள் 8 எண்ணிக்கையிலும், கைப்புகை தெளிப்பான்கள் 41 எண்ணிக்கையிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சேலம் மாநகராட்சியின் சித்த மருத்துவப் பிரிவின் மூலம் தேவையான காலங்களில் டெங்கு நோய் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு பொதுமக்களுக்கு நிலவேம்பு கசாயம் வழங்கப்படுகிறது. சேலம் மாநகராட்சியின் மைய அலுவலகம், வார்டு அலுவலகங்கள், அனைத்து நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள் போன்ற பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் நோய் பரவும் காலங்களில் நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டு வருகிறது.

நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அரசால் வழங்கப்படும் அறிவுரைகள் மற்றும் உத்திரவுகளை பின்பற்றி உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை மாநகராட்சி பகுதிகளில் கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் சேலம் மாநகராட்சியில் டெங்கு காய்ச்சல் இல்லை என்ற நிலையினை அடைவது என்பதை குறிக்கோளாக கொண்டு சிறப்பான முறையில் நோய்தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டும், டெங்கு நோய் பரப்பும் கொசுக்கள் உற்பத்தி ஆகாதவாறு தடுப்பதற்காகவும், கொசுப்புழு உற்பத்தியாகும் ஆதாரங்களை கண்டறிந்து அழித்திடவும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வீடு வீடாகச் சென்று விநியோகிக்க துண்டு பிரசுரங்கள் அச்சடித்து வெளியிடப்பட்டுள்ளது.

**கிருமிநாசினி மற்றும் இராசாயனங்கள் கொள்முதல் விபரம்**

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை 10 மெ.டன் பிளிச்சிங் பவுடர், 40 மெ.டன் நீர்த்த சுண்ணாம்புகள் வீதம் 2024–2025 ல் 40 மெ.டன் பிளிச்சிங் பவுடர் ரூ.18.88 இலட்சத்திற்கும், 160 நீர்த்த சுண்ணாம்புதூள் ரூ.17.00 இலட்சத்திற்கும் பொது நிதியிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

டெங்கு நோய் தடுப்பு பணிக்காக கொசு புழுக்களை ஒழிக்கும் நடவடிக்கைகளுக்கு தேவையான பூச்சிக்கொல்லி இரசாயணங்கள் பைரித்திரம் 1000 லிட்டர் ரூ.9.96 இலட்சத்திற்கும் டெமிபாஸ் 2000 லிட்டர் ரூ.12.98 இலட்சத்திற்கும் மாலத்தியான் டெக்னிகல் 2000 லிட்டர் ரூ.13.78 இலட்சத்திற்கும் பொது நிதியிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## அம்மா உணவகம்

சேலம் மாநகராட்சியில் நான்கு வார்டு அலுவலக பகுதிகளில் 10 எண்ணிக்கையிலான அம்மா உணவகங்களும், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் ஒரு எண்ணிக்கையிலான அம்மா உணவகமும் என மொத்தம் 11 அம்மா உணவகங்கள் செயல்பட்டு வருகிறது. மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் சமையல் செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். உணவகங்களில், சுகாதாரமாக உணவு வகைகளை தயாரிக்க மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு கைதேர்ந்த சமையல் கலை வல்லுநர்கள் மூலம் சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சியில் 11 எண்ணிக்கையிலான அம்மா உணவகங்களில் 2022–2023–ம் ஆண்டில் ரூ.418.44 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டு, உணவு பொருட்களின் விற்பனை மூலம் ரூ.65.36 இலட்சம் வருவாயாக வரப்பெற்றுள்ளது. சேலம் மாநகராட்சியின் 11 எண்ணிக்கையிலான அம்மா உணவகங்களின் உணவு பொருட்கள் தயாரிப்பு மற்றும் விற்பனை ஆகியவற்றின் மூலம் ஏற்படும் நிதிப் பற்றாக்குறையினை சேலம் மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து ஈடு செய்யப்படுகிறது.

சேலம் மாநகராட்சியில் செயல்பட்டு வரும் 11 எண்ணிக்கையிலான அம்மா உணவகங்கள் சுகாதாரமான முறையில் பராமரிக்கப்பட்டு, தரமான உணவு வகைகள் தயாரிக்கப்பட்டு ஏழை எளிய மக்கள் பயன் பெறும் வகையிலும், அன்றாடம் அரசு மருத்துவமனைக்கு வந்து செல்லும் பொதுமக்கள் பயன் பெறும் வகையிலும் செயல்பட்டு வருகிறது.

## நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நலவாழ்வு மையங்கள்

சேலம் மாநகராட்சியில் தற்போது 16 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 25 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. 60 கோட்ட பகுதிகளும் 84 பகுதிகளாக (SECTORS) பிரிக்கப்பட்டு பொதுமக்களுக்கும் கர்ப்பிணி தாய்மார்களுக்கும் தரமான மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சேலம் மாநகராட்சியில் உள்ள 16 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 25 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் மொத்தம் 232 பணியாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.75 இலட்சம் வீதம் 10 கோடி வரை ஊதியம் தேசிய சுகாதார திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.



## நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்கட்டமைப்பு வசதிகள்

நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு 2023–2024–ம் நிதி ஆண்டில் தேசிய நகர்புற சுகாதார திட்டத்தின் கீழ் 1) செவ்வாய்ப்பேட்டை நகர்புர ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் கட்டிடம், 2) அம்மாபேட்டை நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் கட்டிடம், 3) ரெட்டியூர் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் கட்டிடம், 4) குகை நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் கட்டிடம் ஆகிய 4 இடங்களில் உள்ள, நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு ரூ.240.00 இலட்சம் மதிப்பீட்டில் 19.10.2023 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது.

## சுகாதார நிலையங்களின் உட்கட்டமைப்பு

நடப்பு நிதியாண்டில் 2023–2024–ல் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு இயக்குநரகம், சென்னை அவர்களின் அறிவுறுத்தலின்படி இம்மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கீழ்கண்டுள்ள 12 துணை சுகாதார நிலையங்கள், 4 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் ஒரு புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் அமைத்திட 15–வது மத்திய நிதிக்குழு மானியத்தின் கீழ் ரூ.3.6 கோடி மதிப்பீட்டில் 19.10.2023 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் முடிவடைந்து பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது.

தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகின்ற 16 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் இடப்பற்றாக்குறையாக உள்ள சுப்ரமணியநகர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு புதிய கட்டிடம் மற்றும் கூடுதல் கட்டிடம் கிச்சிப்பாளையம் மற்றும் அண்ணா மருத்துவமனை ஆகிய 2 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஆய்வகங்கள், மருந்து இருப்பு அறை, நோயாளிகள் காத்திருப்பு அறை கட்டுவதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு கோரி தேசிய நகர்ப்புற சுகாதார இயக்ககத்திற்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டு புதிய கட்டிடத்திற்கு ரூ.150 இலட்சம் மற்றும் இரண்டு கூடுதல் கட்டிடத்திற்கு ஒரு கட்டிடத்திற்கு ரூ.60.00 இலட்சம் வீதம் ஒதுக்கீடு செய்து அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

## டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித்திட்டம்

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ், வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள கருவுற்ற தாய்மார்கள் மகப்பேறு காலத்தில் ஊட்டச்சத்தான உணவு உண்ணவும், வருவாய் இழப்பை ஈடுகட்டவும் ஒவ்வொரு கர்பத்திற்கும் ரூ.18,000/– வீதம் முதல் இரண்டு கர்ப்பத்திற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. கருவுற்ற தாய்மார்களுக்கு தலா ரூ.2000/– மதிப்புள்ள ஊட்டச்சத்து பெட்டகம் இரண்டு தவணைகளாகவும், ரூ.6000/– வீதம் இரண்டு தவணைகளாகவும் ரூ.2000/– மூன்றாவது தவணைகளாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் அனைத்து கருவுற்ற கர்ப்பிணித் தாய்மார்களும் பிரசவ கால நிதியுதவி பெற ஏதுவாக ஒவ்வொரு தாய்மார்களின் கருவுற்ற விபரங்கள் கணினியில் பதியப்பட்டு, ஒவ்வொரு தாய்மார்களுக்கும் கர்ப்ப பதிவு எண் வழங்கப்பட்டு, கர்ப்ப கால பரிசோதனைகள் விவரம், பிரசவ குறிப்பு, தடுப்பூசி போன்ற விபரங்கள் பதியப்பட்டு தொடர் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

சேலம் மாநகராட்சிக்கு 2024–2025ம் நிதியாண்டில் ரூ. 364.48 இலட்சம் நிதி ஒதுக்கீடாக பெறப்பட்டு, ஜனவரி 2025 முடிய 7,112 பயனாளிகளுக்கு இத்தொகையிலிருந்து செலவிடப்பட்டுள்ளது. இத்தொகை பயனாளிகள் வங்கி கணக்குகளுக்கு மாவட்ட கருவூலம் மூலமாக நேரடியாக வழங்கப்பட்டு வருகிறது.



### ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம்

வீட்டில் நடைபெறும் பிரசவங்கள் மூலம் ஏற்படும் சிக்கல்களை தடுப்பதற்கும், மருத்துவமனைகளில் நடைபெறும் பிரசவங்களை ஊக்குவிக்கவும், தாய் மற்றும் பச்சிளங்குழந்தைகளின் இறப்பை தடுப்பதற்கும், அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவிக்கும் அனைத்து தாய்மார்களுக்கு பிரசவ கால நிதிஉதவியாகநகர்புற மகப்பேறு தாய்மார்களுக்கு ரூ.600/– மற்றும் கிராமப்புற மகப்பேறு தாய்மார்களுக்கு ரூ.700/– வழங்கப்படுகிறது.

2024–2025 ஆம் நிதியாண்டில் ரூ.7 இலட்சத்து 30 ஆயிரம் அரசு நிதியுதவியாக பெறப்பட்டு 1176 தாய்மார்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பிரசவித்த அனைத்து தாய்மார்களுக்கும் குழந்தை பாதுகாப்பிற்கு சேய் பெட்டகம் 1218 எண்ணிக்கையில் வழங்கப்பட்டுள்ளது.

### மக்களை தேடி மருத்துவம் :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு சேலம் மாநகராட்சியில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் "மக்களை தேடி மருத்துவம்" திட்டத்தின்கீழ் தொற்றா நோய்களுக்கான மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், தினசரி புறநோயாளிகள் பிரிவில், 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்/பெண் ஆகிய இருபாலருக்கும் இரத்த அழுத்தம், இரத்தத்தில் சர்க்கரை, மார்பகம் மற்றும் கர்ப்பபை புற்றுநோய், வாய்ப்புற்று நோய் மற்றும் இரத்தத்தில் கொழுப்பு கண்டறிதல் போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது.

புதிய நோயாளிகளை எளிதில் கண்டறிந்து சிகிச்சை அளிக்கவும் இரத்த பரிசோதனைகள் மேற்கொள்ளவும் பயன்படுத்த தேவையான 12 எண்ணிக்கையிலான Cell Counter எனும் இரத்த அணுக்கள் நோய்க்கு நவீன இரத்த பரிசோதனை கருவி தேசிய நகர்புற சுகாதார திட்டத்தின் கீழ் பெறப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் சர்க்கரை, இரத்த அழுத்தம், இருதய நோய் கண்டறியப்பட்டுள்ள நோயாளிகளுக்கு வழங்க தேவையான மாத்திரைகள் நடப்பு நிதியாண்டில் ரூ.36.31 இலட்சத்திற்கு தமிழ்நாடு அரசின் மருந்து கிடங்கு மூலம் பெறப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

மக்களைத் தேடி மருத்துவ திட்டத்தின்கீழ் 10,000 மக்கள் தொகைக்கு 1 மகளிர் தன்னார்வலர் வீதம் சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சேவையாற்றிட 84 தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் மூலமாக தினசரி 20 குடும்பங்கள் வீதம் நாளதுவரை 7,41,588 நபர்கள் பார்வையிடப்பட்டு அதில் 70,144 சர்க்கரை (DM), 1,47,101 உயர்இரத்த அழுத்தம் (HT), 79,673 இருநோய் (BOTH) உள்ளவர்களை கண்டறிந்து மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் சிகிச்சை அளிக்கப்பட்டு மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் இத்திட்டத்தில், வயது முதிர்ந்த நோய் தீவிரம் அதிகமுள்ள நோயாளிகளுக்கு வீடுகளுக்கே சென்று சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.அதற்காக 4 எண்ணிக்கையிலான வாகனங்களில் தேவையான உபகரணங்களுடன் தலா ஒரு செவிலியர், ஒரு பிசியோதேரபிஸ்ட் உள்ளடக்கிய 4 மருத்துவ குழுக்கள் செயல்பட்டு வருகிறது.

### வருமுன் காப்போம் திட்டம் :

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ் 2024–25– ம் நிதியாண்டில் நான்கு வார்டு அலுவலகங்களுக்கும் தலா ஒரு முகாம் வீதம் ஒரு வருடத்திற்கு நான்கு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்தில் 04.01.2025 அன்று நடைபெற்ற முகாமில் 1142 நபர்கள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். மேலும் சூரமங்கலம், அஸ்தம்பட்டி மற்றும் அம்மாப்பேட்டை மண்டலத்தில் வருமுன் காப்போம் திட்ட முகாம்கள் நடத்தப்பட உள்ளது.



இத்திட்டத்தின் கீழ் மகளிர் மற்றும் குழந்தைகள் நலன்காக்கும் பல்வேறு நலத்திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்திட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- தொற்றா நோய்களுக்கான சிறப்பு புறநோயாளிகள் பிரிவு, இரத்த அழுத்தம், நீரழிவு நோய்,கர்ப்பபை புற்றுநோய் மற்றும் இருதயநோய் கண்டறிதல்.
- சிறுநீர் மற்றும் இரத்தபரிசோதனைக்கான ஆய்வகங்கள்.
- சிறுநீரக தொற்று மற்றும் பால்வினை தொற்று நோய்களுக்கான சிகிச்சை.
- காசநோய் மற்றும்தொழுநோய் சிகிச்சை பிரிவு.
- எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் பரிசோதனை மற்றும் ஆலோசனை பிரிவு.
- கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுதல்
- வெறி நாய்கடிகளுக்கான தடுப்பூசி போடுதல்.
- குடம்ப கட்டுபாட்டு திட்டங்களை ஊக்குவித்தல்

**நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் தற்காலிகமாக பணிபுரியும் பணியாளர்களின் ஊதியம் :**

சேலம் மாநகராட்சியில் 16 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் 84 பகுதிகளாக பிரிக்கப்பட்டு நகர்ப்புற சுகாதார செவிலியர்கள் மூலம் பொதுமக்கள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றது. 84 நகர்ப்புற சுகாதார செவிலியர்கள் பணியிடங்களில் 34 நகர்ப்புற சுகாதார செவிலியர்கள் மற்றும் 7 மருந்தாளுனர்கள் என தற்காலிக பணியாளர்களை கொண்டு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றது. இதற்கு மாதம் ரூ.6.50 இலட்சம் வீதம் வருடத்திற்கு ரூ.78.00 இலட்சம் செலவிடப்படுகிறது.

**நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய தர உறுதி சான்று :**

நடப்பு நிதியாண்டில் ரெட்டியூர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் தேசிய சுகாதார திட்டத்தின்கீழ் ஆய்வு மேற்கொண்டு, குறிப்பாக உட்கட்டமைப்பு மற்றும் மருத்துவ சேவைகள், சாதனைகள், குறியீடுகள் மதிப்பீடு செய்யப்பட்டு 90.06 சதவீதம் குறியீட்டு சாதனை வழங்கி தேசிய தர உறுதி சான்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது 10 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் தர உறுதி சான்றிற்கு தேர்வு செய்யப்பட்டு முதற்கட்டமாக மாநில அளவில் தர உறுதி சான்றுக்கான ஆய்வுகள் முடிக்கப்பட்டுள்ளது.

**ராஷ்ட்ரிய பால ஸ்வஸ்திய க்ரியகரம் பள்ளி சிறார் நல வாழ்வு திட்டப் பணிகள் (RBSK):**

தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ் சேலம் மாநகராட்சிக்கு 2024–25 ஆம் ஆண்டில் 2 வாகனங்களுடன் கூடிய 2 மருத்துவ குழுக்கள் ஒதுக்கப்பட்டு பிறந்த குழந்தைகள் முதல் 18 வயதிற்குட்பட்ட பள்ளி செல்லும் குழந்தைகள் வரை மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு, ஊட்டச்சத்தை மேம்படுத்த, ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் குறிப்பாக பிறந்த குழந்தைகளுக்கு ஏற்படும் பிறவி ஊனம், குழந்தைகளின் வளர்ச்சியில் ஏற்படும் குறைபாடு, ஊட்டச்சத்து குறைபாடு, மற்றும் உறுப்பு திறன் குறைபாடு ஆகியவற்றை கண்டறிந்து காலதாமதம் ஏற்படாமல் மருத்துவ மனைக்கு அனுப்பி தொடர் சிகிச்சை அளிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டத்தின் மூலம் மாதந்தோறும் பள்ளிகளுக்கு சென்று மாணவர்களின் உடல் எடை அளவிடப்பட்டும், உடல் பரிசோதனைகள் செய்யப்பட்டும் வருகிறது. தேவையான நேர்வுகளில் மருத்துவ சிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்படுகிறது. மேலும் பள்ளி மாணவர்களுக்கு தேவைப்படும் இதர அனைத்து மருத்துவ சேவைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் நடப்பு நிதியாண்டில் டிசம்பர் 2024 வரை 50,782 எண்ணிக்கையிலான குழந்தைகள் பயன்பெறும் வகையில் அனைத்து பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு, தடுப்பூசிகள் செலுத்தி, மேற்கொண்டு சிகிச்சை தேவைப்படும் மாணவர்களுக்கு சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு DEIC–900 சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டது.

1) Cleft lip/Cleft palate – பிளவு உதடு /அன்னப்பிளவு அறுவை சிகிச்சை – 05

2) Cleft foot – 02

3) Congential Heart Disease – பிறவி இதய நோய் அறுவை சிகிச்சை – 09

**நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் வழங்கப்படும் தாய் சேய் நல சேவைகள்**

சேலம் மாநகராட்சியில் 2024–25–ம் நிதி ஆண்டில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1176 பிரசவங்கள் மேற்கொள்ளப்பட்டது. சேலம் மாநகராட்சியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாக 1 இலட்சத்து 9 ஆயிரம் 182 புறநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

## நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய பிரசவ அறிக்கை :




மேலும் குழந்தை பிறந்த அன்றே காசநோய் தடுப்பூசி, மஞ்சள் காமாலை தடுப்பூசி மற்றும் போலியோ சொட்டு மருந்து வழங்கியும் 6வது, 10வது மற்றும் 14வது வாரங்களில் 5 நோய்களுக்கான தடுப்பூசியும் (Pentavalent), வயிற்று போக்கு ஏற்படாமல் இருக்க (ROT¬A VIRUS) ரோட்டா வைரஸ் சொட்டு மருந்தும் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் மொத்தம் 6404 குழந்தைகளுக்கு மேற்கண்ட தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 10 வது மாதத்தில் தட்டம்மை தடுப்பூசியுடன் 6869 குழந்தைகளுக்கு IPV ஊசி மருந்தும் வழங்கப்பட்டு வருகிறது.

## பாலிகிளினிக் :

தனியார் மருத்துவமனைக்கு நிகரான சிகிச்சை வழங்க அண்ணா மருத்துவமனை, குமாரசாமிபட்டி, பள்ளப்பட்டி மற்றும் அன்னதானப்பட்டி ஆகிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில்பல்நோக்கு சிறப்பு மருத்துவ நிபுணர்கள் அமர்த்தப்பட்டு தினசரி மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை பொது மருத்துவம் (திங்கட்கிழமை), மகப்பேறு மருத்துவம் (செவ்வாய்கிழமை), குழந்தைகள் மருத்துவம் (புதன் கிழமை),இயன்முறை மருத்துவம் மற்றும் கண் மருத்துவம் (வியாழக்கிழமை) தோல் மற்றும் பல் மருத்துவம் (வெள்ளிக்கிழமை) மனநல மருத்துவம் (சனிக்கிழமை) திங்கள் முதல் சனிக்கிழமை வரை சிறப்பு நிபுணர்களால் சிகிச்சை அளிக்கவும், ஆய்வக பரிசோதனை மற்றும் ஸ்கேன், கண் பரிசோதனை மேற்கொண்டு, தேவை ஏற்படின் மேற்சிகிச்சை வழங்க பரிந்துரைக்கப்படுகிறது. இதில் சேவையாற்ற வரும் சிறப்பு மருத்துவ நிபுணர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஊக்கத்தொகையாக ரூ.3,000/– வீதமும், இயன்முறை மருத்துவருக்கு ரூ.2,000/– வழங்கப்பட்டு வருகிறது.

### குடும்ப நல சேவைகள் :

தமிழக அரசின் குடும்பநல துறை மூலமாக 2024–25ம் நிதியாண்டில் அனைத்து நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைங்களில் பிரசவித்த தாய்மார்கள் 1176 நபர்களுக்கு PPIUCD என்ற நவீன காப்பர் "T" கருத்தடை சாதனம் பொருத்தப்பட்டு குடும்ப நல ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது.

குடும்ப கட்டுப்பாடு தற்காலிக கருத்தடை சாதனமாக புதியதாக "அந்தாரா" கருத்தடை ஊசி அறிமுகம் செய்யப்பட்டு 2 குழந்தைகளுக்கு மேல் பிரவித்த தாய்மார்களுக்கு 3 மாதத்திற்கு ஒரு முறை 5 ஊசிகள் போடப்படுவதால், 2–3 வருடங்களுக்கு தற்காலிக இடைவெளி ஏற்படுத்தப்பட்டு குடும்ப நலம் பேணப்படுகிறது. மேலும் குடும்ப நல இடைவெளிக்காக "சாயா"கருத்தடை மாத்திரைகள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு தாய் நலம் பாதுகாக்கப்படுகிறது.

### தேசிய குடற்புழு நீக்கும் திட்டம் :

இத்திட்டத்தில் 2024–25–ம்நிதியாண்டில் பிப்ரவரி மாதம் 9ம் தேதி மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டு. குடற்புழு நீக்க மாத்திரைகள் 1 முதல் 19 வயது வரையிலான பள்ளி செல்லும் மற்றும் பள்ளி செல்லா குழந்தைகளுக்கு அனைத்து அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்கள் மூலமாக வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள 2.55 இலட்சம் பள்ளி குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர். இதன்மூலம் குழந்தைகளுக்கு இரத்த சோகை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு ஏற்படாமல் தடுக்கப்பட்டுள்ளதால் மாணவர்களின் வருகை சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.



**இரத்த சோகை தடுப்பு திட்டம் மற்றும் மாணவிகளுக்கான இலவச நாப்கின்(புதுயுகம்) வழங்கும் திட்டம்:**

பள்ளி மாணவ/மாணவியர்களுக்கு ஏற்படும் இரத்த சோகையை தடுக்கும் பொருட்டு, அனைத்து அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளுக்கு வியாழக்கிழமைகளில் வாரந்தோறும் ஒரு மாணவருக்கு ஒரு மாத்திரை வீதம் வருடத்திற்கு 52 மாத்திரைகள் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் மாநகராட்சி பகுதிகளில் உள்ள 1.82 இலட்சம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் 10 வயது முதல் 19 வயது வரை உள்ள மாணவிகளுக்கு மாதவிடாய் காலத்தில் ஆரோக்கியமாகவும் தொற்று ஏற்படாமல் இருக்கவும் அந்தந்த பள்ளி மற்றும் கல்லூரிகள் மூலமாக தலா 2 பாக்கெட் நாப்கின்கள் இலவசமாக மாதம்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் நடப்பு நிதியாண்டில் 79,175 மாணவிகள் பயன் பெற்றுள்ளனர்.

**வைட்டமின் ’A’ குறைபாடு சிகிச்சை திட்டம் :**

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியிலுள்ள 6 மாதம் முதல் 60 மாதம் வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும், 6 மாதத்திற்கொருமுறை அங்கன்வாடி மையம் மற்றும் மாநகராட்சி நகர்புற ஆரம்ப சுகாதார மையங்கள் மூலமாக வைட்டமின் ’A’ திரவம் வழங்கப்பட்டு வருகிறது. 2024–25–ம் நிதியாண்டில் செப்டம்பர் மாதத்தில் ஒரு வயது முதல் 5 வயது வரையுள்ள 65,565 குழந்தைகளுக்கு வைட்டமின் ’A’ திரவம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு,மொத்தம் 62,318 குழந்தைகளுக்கு (95%) குழந்தைகளுக்கு 2 மி.லி. அளவில்வைட்டமின் திரவம் வழங்கப்பட்டுள்ளது.



இதன் மூலம் குழந்தைகளுக்கு ஏற்படும் மாலைக்கண் குறைபாடு, பார்வை இழப்பு, வயிற்றுப்போக்கு மற்றும் நுரையீரல் தொற்று நோய்கள் தடுக்கப்படுவதுடன், குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புசக்தி கிடைப்பதால், குழந்தைகள் இறப்பு விகிதம் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது.

**பிறப்பு இறப்பு பதிவு :**

மத்திய பிறப்பு இறப்பு பதிவுச்சட்டம், 1969 மற்றும் பிறப்பு இறப்பு பதிவு திருத்தச் சட்டம் 2023–ன் படியும் தமிழ்நாடு பிறப்பு இறப்பு பதிவு விதிகள் 2000–ன் படியும் பிறப்பு இறப்பு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 2018 ஆம் ஆண்டு முதல் பிறப்பு இறப்பு பதிவானது CRS மென்பொருளில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. சேலம் மாநகராட்சியில் 62 பிறப்பு இறப்பு பதிவு பகுதிகள்உள்ளன. இம்மாநகராட்சியில் கடந்த 2024 ஆம் ஆண்டு (ஜனவரி முதல் டிசம்பர் வரை) 19186 பிறப்புகளும் 6881 இறப்புகளும் பதிவு செய்யப்பபட்டுள்ளன.

ஆன்லைன் மூலம் பிறப்பு இறப்பு பதிவுகள் மேற்கொண்டு சான்றிதழ்கள் வழங்க 5 வார்டுகளுக்கு ஒரு தரவு உள்ளீட்டாளர் என 60 வார்டுகளுக்கு 12 தரவு உள்ளீட்டாளர்களும், மைய அலுவலகத்தில் 2017 ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்டுள்ள பிறப்பு இறப்பு தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக 4 தரவு உள்ளீட்டாளர்களும் மொத்தம் 16 தரவு உள்ளீட்டார்களை பிறப்பு இறப்பு பதிவு தொடர்பாக நியமனம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ஈமச்சடங்கு மானியம் :**

சேலம் மாநகராட்சியில் தமிழக அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டிற்கு கீழ் வசிக்கும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறுத்துவ ஆதிதிராவிடர் வகுப்பினை சார்ந்த குடும்ப உறுப்பினர்கள் எவரேனும் இறக்க நேரிட்டால் அவர்களது ஈமக்கிரியை செலவிற்காக ரூ.5000/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது. 2023–2024ஆம் ஆண்டிற்கான 248 பயனாளிகளுக்கு ஈமச்சடங்கு மானியமாக ரூ12.40 இலட்சம் பெற்று சம்மந்தப்பட்ட மண்டலங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## நகரமைப்பு திட்டப் பிரிவு

### அனுமதி பெறாத மனைப்பிரிவு / மனைகள்வரன்முறைப்படுத்தும் திட்டம் :

அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை, நாள்: 04.05.2017 மற்றும் அரசாணை ( நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் ( ந.வ.4(3) ) துறை நாள் 13.10.2017 ன் படி 20.10.2016 க்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட மனைகள் வரன்முறைப்படுத்த உத்திரவு வழங்கப்பட்டு 2017 முதல் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் சேலம் மாநகராட்சியில் 20.10.2016 க்கு முன்னர் உருவாக்கப்பட்ட 183 அனுமதியற்ற மனைப் பிரிவுகளில் 7754 மனைகளில் 7638 மனைகள் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

சேலம் மாநகரப் பகுதியில் 20.10.2016 க்கு பின்னர் உருவாக்கப்பட்ட சுமார் 87 க்கு மேற்பட்ட மனைப்பிரிவுகளில் உள்ள சுமார் 1200 மனைகள் வரன்முறைப்படுத்த இயலாத நிலை உள்ளது. 20.10.2016–க்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட மனைகள் என்று நிர்ணயிக்கப்பட்ட வரம்பினை 31.12.2024 வரையில் பதிவு செய்யப்பட்ட மனைகளை வரன்முறைப்படுத்த விதிகளை தளர்த்தி அனுமதி வழங்கினால் மனைப்பிரிவு உரிமையாளர்கள் ஏற்கனவே செலுத்தாத மேம்பாட்டு கட்டணங்களை வரன்முறைப்படுத்துதல் கட்டணமாக செலுத்த வழி வகை ஏற்படுவதால் அரசுக்கும் மாநகராட்சிக்கும் வருவாய் பெருக வாய்ப்பு ஏற்படும்.

மேலும் மேற்படி வரன்முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவில் உள்ள மனைதாரர்கள் கட்டிட அனுமதி மற்றும் வங்கிக் கடன் பெற்று கட்டிடம் கட்டிக் கொள்ளவும் ஏதுவாக அமையும். எனவே மனைகளை வரன்முறைப்படுத்திட எடுத்துக்கொள்ளும் நிர்ணயிக்கப்பட்ட வருடமான 20.10.2016 என இருந்து வருவதை மறுசீரமைப்பு செய்திட அரசிற்கு மேலனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### அனுமதியற்ற மனைப் பிரிவுகளுக்கு அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல் :

சேலம் மாநகராட்சி பகுதிகளில் உள்ள நான்கு வார்டு அலுவலகங்களில் ஏற்கனவே அபிவிருத்தி அடையப்பெற்று குடியிருப்புகள் நிறைந்த பகுதிகள் அனுமதியற்ற மனைப்பிரிவுகளாக அமைந்துள்ளது.

மேற்கண்ட அரசாணையில் மனை வரன்முறைப்படுத்த அணுகு சாலையின் அகலம் 4.8 மீட்டர் (16 அடி) என குறிப்பிடப்பட்டுள்ளது. மாநகரில் பழைய நகர அபிவிருத்தி பகுதிகளில் அரசாணையில் உள்ளவாறு சாலையின் அகலம் 4.8 மீட்டர் (16 அடி) குறைவாக உள்ளதால் மனை வரன்முறைப்படுத்த முடியாத நிலை இருந்து வருகிறது. இதன் பொருட்டு மேற்கண்ட பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்ய இயலாத நிலை இருந்து வருகிறது.

இதனால் மேற்கண்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் அரசிடமிருந்தும் அல்லது தனியார் பங்களிப்போடும் பல்வேறு அடிப்படை வசதிகளை மேற்கொள்ள இயலாத நிலையில் அப்பகுதி பொதுமக்கள் அரசின் திட்டங்களை பயன்படுத்திக்கொள்ள இயலாத சூழல் அமைகிறது. இந்நிலையில் மேற்கண்டவாறான குறைகளை களைந்திட அனைத்து பகுதிகளிலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடும் வகையில் சிறப்பினமாக சாலை அகலம் 4.8 மீட்டர் (16 அடி) குறைவாக உள்ள அனுமதியற்ற மனைகளுக்கும் அடிப்படை வசதிகளை செய்திட அரசிற்கு முன்மொழிவுகள் சமர்பித்து உரிய அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## வருவாய் பிரிவு

வரியினங்கள் (Taxes)

### சொத்து வரி

| மொத்த வரிவிதிப்புகள் | 212261 எண்ணிக்கைகள் |
|---|---|
| 2024–2025 க்கு எதிர்பார்க்கப்படும் வரி வசூல் | ரூ.12000.00 இலட்சங்கள் |
| 2025–2026 க்கு உத்தேசிக்கப்படும் வரி வசூல் | ரூ.15000.00 இலட்சங்கள் |

வருகின்ற நிதி ஆண்டில் நிலுவையில் உள்ள மாநகராட்சி சொத்துவரி உள்ளட்ட பிற வரி இனங்கள் மற்றும் வரியில்லா இனங்கள் முழுவதும் மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் அலுவர்களின் துணையோடு வசூல் செய்யப்படும். நிலுவையிலுள்ள சொத்துவரி வழக்குகளை விரைவில் முடிவுக்கு கொண்டு வரவும், அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களிலிருந்து மாநகராட்சிக்கு வரவேண்டிய நிலுவை சொத்து வரித் தொகையினை வசூலிக்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### காலி நிலவரி

| மொத்த எண்ணிக்கைகள் | 15,290 எண்ணிக்கைகள் |
|---|---|
| 2024–2025 எதிர்பார்க்கப்படும் வரி வசூல் | ரூ. 300.00 இலட்சங்கள் |
| 2025–2026 உத்தேசிக்கப்படும் வரி வசூல் | ரூ. 350.00 இலட்சங்கள் |

### தொழில்வரி

| மொத்த எண்ணிக்கைகள் | 24,803 எண்ணிக்கைகள் |
|---|---|
| 2024–2025 எதிர்பார்க்கப்படும் வரி வசூல் | ரூ. 1350.00 இலட்சங்கள் |
| 2025–2026 உத்தேசிக்கப்படும் வரி வசூல் | ரூ. 1500.00 இலட்சங்கள் |

### குடிநீர் கட்டணம் :

| மொத்த குடிநீர் இணைப்புகள் | 1,18,004 எண்ணிக்கைகள் |
|---|---|
| 2024–2025 எதிர்பார்க்கப்படும் வரி வசூல் | ரூ. 3000.00 இலட்சங்கள் |
| 2025–2026 உத்தேசிக்கப்படும் வரி வசூல் | ரூ. 3450.00 இலட்சங்கள் |

### கேளிக்கை வரி :

| | |
|---|---|
| 2024–2025 எதிர்பார்க்கப்படும் வரி வசூல் | ரூ. 180.00 இலட்சங்கள் |
| 2025–2026 உத்தேசிக்கப்படும் வரி வசூல் | ரூ. 250.00 இலட்சங்கள் |

### மாநகராட்சி கடைகள் :

| | |
|---|---|
| 2024–2025 எதிர்பார்க்கப்படும் வரி வசூல் | ரூ. 1300.00 இலட்சங்கள் |
| 2025–2026 உத்தேசிக்கப்படும் வரி வசூல் | ரூ. 1500.00 இலட்சங்கள் |

## சொத்துகள் மூலம் வரவு
## குத்தகை இனங்கள், ஆண்டு உரிமையாணை இனங்கள்

| | |
|---|---|
| 2024–2025 எதிர்பார்க்கப்படும் வரி வசூல் | ரூ. 900.00 இலட்சங்கள் |
| 2025–2026 உத்தேசிக்கப்படும் வரி வசூல் | ரூ. 1000.00 இலட்சங்கள் |

### எதிர்பார்க்கப்படும் வருவாய் இனங்கள்

சேலம் மாநகராட்சியில் நிதி ஆதாரத்தை மேம்படுத்த நான்கு வார்டு அலுவலகங்களுக்குட்பட்ட பகுதியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள கீழ்க்கண்ட இனங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு உட்படுத்தும் போது கீழ்க்கண்ட விபரப்படி மாநகராட்சியின் முக்கியமான நிதி ஆதாரத்தை மேம்படுத்திட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ எண் | அமைவிடம் | வைப்புத் தொகை | எதிர்பார்க்கப்படும் வருவாய் |
|---|---|---|---|
| 1 | பழைய பேருந்து நிலையம் அருகில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு வாகன நிறுத்தம் அமைக்கப்பட்டுள்ளது. | 15.00 | 100.00 |
| 2 | பழைய பேருந்து நிலையம் அருகில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் 6 அடுக்கு கொண்ட குளிரூட்டும் வசதிகளுடன் பெரியார் பேரங்காடி வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. | 97.00 | 111.54 |
| 3 | போஸ் மைதானம் மேல் மைதானத்தில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் 4 அடுக்கு வணிக வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது. | 216.00 | 75.02 |
| 4 | ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் ஈரடுக்கு பேருந்து நிலையத்தில் 200 கடைகள் மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் நவீன கட்டணக் கழிப்பிடம் அமைக்கப்பட்டு வருகிறது. | 660.00 | 331.36 |
| 5 | கோட்டம் எண், 32 ஆனந்தா இறக்கம் அருகில் ஸ்மார்ட் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் பல்நோக்கு வசதிகளுடன் கூடிய வாகன நிறுத்துமிடம் அமைக்கப்பட்டு வருகிறது. | 15.00 | 187.18 |
| 6 | கோட்டம் எண் 32 ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் வ ஊ சி நாளங்காடி புதிதாக நவீன வசதிகளுடன் கூடிய ஈரடுக்கு கடைகள் கட்டப்பட்டு வருகிறது. | 200.00 | 28.00 |
| | மொத்தம் | 1203.00 | 833.10 |

## கணக்கு பிரிவு

### கட்டுமான தொழிலாளர் நல நிதி :

சேலம் மாநகராட்சியில், சாலைகள், வடிகால், சிறுபாலம் கட்டும் பணி மற்றும் அபிவிருத்தி பணிகளுக்காக வழங்கப்படும் செலவின பட்டியலில் ஒரு சதவீதம் கட்டுமான தொழிலாளர் நல நிதி பிடித்தம் செய்யப்படுகிறது.

**2024–2025** ஆம் ஆண்டு ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட கட்டுமான தொழிலாளர் நல நிதி ரூ. **281.94** இலட்சம் தொகையினை தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

### மின் கட்டணம் :

**2024–2025** ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இம்மாநகராட்சியால் செலுத்தப்பட்ட மின் நுகர்வு கட்டணம் விவரம்:–

| வ. எண். | மின் பயன்பாடுகள் | செலுத்தப்பட்ட தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | தெரு விளக்கு, குடிநீர் தொட்டிகள், கட்டிடங்களுக்கான மின் கட்டணம் | ரூ. 18.33 |
| 2 | சூரமங்கலம், அஸ்தம்பட்டி, அம்மாப்பேட்டை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி HT Line | ரூ. 2.44 |
| | **மொத்த தொகை** | **ரூ. 20.77** |

### கடன் செலுத்தப்பட்ட விவரம் :

**2024–2025** ஆம் நிதியாண்டில் இம்மாநகராட்சியின் தனிக் குடிநீர் திட்டம், பாதாள சாக்கடைத் திட்டம், திருமணி முத்தாறு அபிவிருத்தி போன்ற சிறப்பு திட்டப் பணிகளுக்காக அரசு நிதியகங்களிலிருந்து பெறப்பட்ட கடன்களுக்கான அசல் மற்றும் வட்டித்தொகையாக மொத்தம் ரூ. **4,449.25** இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது.

**ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் நலன் :**

சேலம் மாநகராட்சியில் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பிரதி மாதம் தேசிய மின்னணு பண பரிவர்த்தனை (National Electronic Fund Transfer) மூலம் சம்மந்தப்பட்ட ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக சேர்க்கப்பட்டு வருகிறது.

சேலம் மாநகராட்சியில் மைய அலுவலகம் மற்றும் நான்கு மண்டல அலுவலகங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கும், பணிக்காலத்தில் காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் 2024 – 2025 ஆம் நிதியாண்டில் பணிக்கொடையாக (DCRG) ரூ. 1449.39 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்கள் இறக்க நேரிட்டால், ஓய்வூதியர்களின் வாரிசுகளுக்கு குடும்ப பாதுகாப்பு நிதியாக 28 நபர்களுக்கு தொகை ரூ. 14.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சியில் 700 ஓய்வூதியர்களும் 655 குடும்ப ஓய்வூதியர்களும் மொத்தம் 1355 நபர்கள் மாதாந்திர ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். 2024–25 ஆம் நிதியாண்டில் ரூ. 3423.40 இலட்சம் ஓய்வூதியமாக வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறும் வகையில் அரசு ஆணை (நிலை) எண். 73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 28.05.2019 –ன்படி, புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 03.03.2020 தேதி முதல் தொடங்கப்பட்டு அதற்குரிய சந்தா தொகை ஒவ்வொரு ஆண்டும் சம்மந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனிக்கு செலுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் 2024–25 ஆம் ஆண்டிற்கான ஆண்டு சந்தாவாக ரூ. 76.22 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது.

# சேலம் மாநகராட்சி
# வரவு செலவுத் திட்டம்
# 2025 - 2026

## நிதி வாரியான வரவினங்கள் மற்றும் செலவினங்கள் நிதி நிலைமை

2025–2026 ஆம் நிதி ஆண்டில் மொத்த வருவாய் மற்றும் மூலதன வரவுகள் ரூ.1,04,343.65 இலட்சம், வருவாய் மற்றும் மூலதனச் செலவுகள் ரூ.1,04,469.65 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டு ரூ.126.00 இலட்சம் பற்றாக்குறையாக உள்ளது.

## பொது நிதி, குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி மற்றும் ஆரம்ப கல்வி நிதி ஆகியவற்றின் சுருக்கம்

ரூபாய் இலட்சத்தில்

| விபரம் | பொது நிதி | குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி | ஆரம்பக் கல்வி நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| வருவாய் வரவினம் | 53550.40 | 9987.25 | 2223.00 | 65760.65 |
| மூலதன வரவினம் | 10260.00 | 28323..00 | 0.00 | 38583.00 |
| **மொத்தம்** | 63810.40 | 38310.25 | 2223.00 | 104343.65 |
| வருவாய் செலவினம் | 36369.00 | 12433.30 | 524.00 | 49326.30 |
| மூலதன செலவினம் | 27743.35 | 26200.00 | 1200.00 | 55143.35 |
| **மொத்தம்** | 64112.35 | 38633.30 | 1724.00 | 104469.65 |
| **உபரி / பற்றாக்குறை** | - 301.95 | - 323.05 | 499.00 | (-) 126.00 |

2025 -2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பற்றாக்குறை நிதியை மாநகராட்சியின் வரி வருவாய் மற்றும் மாநகராட்சியின் சொத்துக்கள் மூலம் வருவாயினை மேம்படுத்தி ஈடுசெய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.




வருவாய் வரவினம் மூலதன வரவினம்




வருவாய் செலவினம் மூலதன செலவினம்

# வரவு செலவுத் திட்டம்
# 2025 - 2026
## வரவினம் மற்றும் செலவினச் சுருக்கம்

ரூபாய் இலட்சத்தில்

| கணக்கு விளக்கம் | முக்கிய குறியீடு | பொது நிதி | குடி நீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி | ஆரம்ப கல்வி நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **வரவினம் (வருவாய்)** | | | | | |
| வரி வருவாய் | 110 | 8475.00 | 5241.25 | 2183.00 | 15899.25 |
| ஒதுக்கப்படும் வருவாய் | 120 | 1450.00 | 0.00 | 0.00 | 1450.00 |
| குத்தகை மற்றும் வாடகை வருவாயினங்கள் | 130 | 4380.20 | 0.00 | 0.00 | 4380.20 |
| கட்டணம் மற்றும் பயனீட்டு கட்டணம் | 140 | 6355.20 | 4620.00 | 0.00 | 10975.20 |
| விற்பனை மற்றும் வாடகைக் கட்டணம் | 150 | 90.00 | 1.00 | 0.00 | 91.00 |
| வருவாய் மானியம் மற்றும் சகாயத் தொகை | 160 | 19750.00 | 0.00 | 40.00 | 19790.00 |
| முதலீடுகள் மீதான வருவாய் | 170 | 150.00 | 125.00 | 0.00 | 275.00 |
| வட்டி மூலம் வருவாய் | 171 | 100.00 | 0.00 | 0.00 | 100.00 |
| இதர வருவாய் | 180 | 3450.00 | 0.00 | 0.00 | 3450.00 |
| வைப்புத் தொகை (கடைகள்) | 340 | 750.00 | 0.00 | 0.00 | 750.00 |
| நிதி மாற்றம் | 311 | 800.00 | 0.00 | 0.00 | 800.00 |
| மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு | 320 | 7800.00 | 0.00 | 0.00 | 7800.00 |
| **மொத்தம்** | | **53550.40** | **9987.25** | **2223.00** | **65760.65** |
| **வரவினம் (மூலதனம்)** | | | | | |
| மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு | 320 | 8260.00 | 23323.00 | 0.00 | 31583.00 |
| கடன்கள் | 330 | 2000.00 | 5000.00 | 0.00 | 7000.00 |
| **மொத்தம்** | | **10260.00** | **28323.00** | **0.00** | **38583.00** |
| **மொத்த வரவினம் / வருவாய் + மூலதனம்** | | **63810.40** | **38310.25** | **2223.00** | **104343.65** |

## வரவு செலவுத் திட்டம்
## 2025 - 2026

ரூபாய் இலட்சத்தில்

| கணக்கு விளக்கம் | முக்கிய குறியீடு | பொது நிதி | குடி நீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி | ஆரம்ப கல்வி நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **செலவினம் (வருவாய்)** | | | | | |
| நிறுவனச் செலவுகள் | 210 | 15866.50 | 4325.00 | 0.00 | 20191.50 |
| நிர்வாகச் செலவுகள் | 220 | 1251.50 | 110.30 | 4.00 | 1365.80 |
| இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 230 | 9761.00 | 7398.00 | 20.00 | 17179.00 |
| வட்டி மற்றும் நிதிச் செலவுகள் / முதலீடுகள் | 240 | 52.00 | 600.00 | 0.00 | 652.00 |
| திட்டச் செலவுகள் | 250 | 500.00 | 0.00 | 0.00 | 500.00 |
| மானியம் மற்றும் சகாயத் தொகை | 260 | 1310.00 | 0.00 | 0.00 | 1310.00 |
| நிதி மாற்றம் ( குடிநீர் நிதி ) | 290 | 5000.00 | 0.00 | 0.00 | 5000.00 |
| இதர பொறுப்புகள் | 350 | 2628.00 | 0.00 | 500.00 | 3128.00 |
| **மொத்தம்** | | **36369.00** | **12433.30** | **524.00** | **49326.30** |
| **செலவினம் (மூலதனம்)** | | | | | |
| கடன்கள் திரும்ப செலுத்துதல் | 330 | 4130.00 | 700.00 | 0.00 | 4830.00 |
| நிலையான சொத்துக்கள் | 410 | 23613.35 | 25500.00 | 1200.00 | 50313.35 |
| **மொத்தம்** | | **27743.35** | **26200.00** | **1200.00** | **55143.35** |
| **மொத்த செலவினம் (வருவாய் + மூலதனம்)** | | **64112.35** | **38633.30** | **1724.00** | **104469.65** |

# வரவு செலவுத் திட்டம்
# 2025 - 2026
## வருவாய் கணக்கு வரவுகள்




ரூபாய் இலட்சத்தில்

| வ. எண். | கணக்கு விளக்கம் | மொத்தம் |
|---|---|---|
| 1 | வரி வருவாய் | 15899.25 |
| 2 | ஒதுக்கப்படும் வருவாய் | 1450.00 |
| 3 | குத்தகை மற்றும் வாடகை வருவாயினங்கள் | 4380.20 |
| 4 | கட்டணம் மற்றும் பயனீட்டு கட்டணம் | 10975.20 |
| 5 | விற்பனை மற்றும் வாடகைக் கட்டணம் | 91.00 |
| 6 | வருவாய் மானியம் மற்றும் சகாயத் தொகை | 19790.00 |
| 7 | முதலீடுகள் மீதான வருவாய் | 275.00 |
| 8 | வட்டி மூலம் வருவாய் | 100.00 |
| 9 | இதர வருவாய் | 3450.00 |
| 10 | வைப்புத் தொகை | 750.00 |
| 11 | நிதி மாற்றம் (கல்வி நிதி) | 800.00 |
| 12 | மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு | 7800.00 |
| | **மொத்தம்** | **65760.65** |

# வரவு செலவுத் திட்டம்
# 2025 - 2026
## மூலதன கணக்கு வரவுகள்




ரூபாய் இலட்சத்தில்

| வ. எண். | கணக்கு விளக்கம் | மொத்தம் |
|---|---|---|
| 1 | மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு | 31583.00 |
| 2 | கடன்கள் | 7000.00 |
| | மொத்தம் | 38583.00 |

# வரவு செலவுத் திட்டம்
## 2025 - 2026
## வருவாய் கணக்கு செலவுகள்




ரூபாய் இலட்சத்தில்

| வ. எண். | கணக்கு விளக்கம் | மொத்தம் |
|---|---|---|
| 1 | நிறுவனச் செலவுகள் | 20191.50 |
| 2 | நிர்வாகச் செலவுகள் | 1365.80 |
| 3 | இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 17179.00 |
| 4 | வட்டி மற்றும் நிதிச் செலவுகள் / முதலீடுகள் | 652.00 |
| 5 | திட்டச் செலவுகள் | 500.00 |
| 6 | மானியம் மற்றும் சகாயத் தொகை | 1310.00 |
| 7 | நிதி மாற்றம் ( குடிநீர் நிதி ) | 5000.00 |
| 8 | இதர பொறுப்புகள் | 3128.00 |
| | **மொத்தம்** | **49326.30** |

# வரவு செலவுத் திட்டம்
# 2025 - 2026
## மூலதன கணக்கு செலவுகள்




ரூபாய் இலட்சத்தில்

| வ. எண். | கணக்கு விளக்கம் | மொத்தம் |
|---|---|---|
| 1 | கடன்கள் திரும்ப செலுத்துதல் | 4830.00 |
| 2 | நிலையான சொத்துக்கள் | 50313.35 |
| | மொத்தம் | 55143.35 |

# வரவு செலவுத் திட்டம்
# 2025 - 2026
## பொது நிதி
## வரவினம் மற்றும் செலவினச் சுருக்கம்

ரூபாய் இலட்சத்தில்

| கணக்கு விளக்கம் | முக்கிய குறியீடு | உள்ளபடி வரவு-செலவு (2023-24) | திட்ட மதிப்பீடு (2024-25) | திருத்திய திட்ட மதிப்பீடு (2024-25) | திட்ட மதிப்பீடு (2025-26) |
|---|---|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 450 | 10789.90 | | 9470.09 | |
| **வரவினம் (வருவாய்)** | | | | | |
| வரி வருவாய் | 110 | 5275.61 | 7217.50 | 6765.04 | 8475.00 |
| ஒதுக்கப்படும் வருவாய் | 120 | 1402.74 | 1250.00 | 1172.31 | 1450.00 |
| குத்தகை மற்றும் வாடகை வருவாயினங்கள் | 130 | 2848.38 | 2490.00 | 3390.43 | 4380.20 |
| கட்டணம் மற்றும் பயனீட்டு கட்டணம் | 140 | 4129.06 | 4786.00 | 5107.58 | 6355.20 |
| விற்பனை மற்றும் வாடகைக் கட்டணம் | 150 | 63.14 | 80.00 | 65.36 | 90.00 |
| வருவாய் மானியம் மற்றும் சகாயத் தொகை | 160 | 16842.02 | 19450.00 | 14987.98 | 19750.00 |
| முதலீடுகள் மீதான வருவாய் | 170 | 90.65 | 100.00 | 102.65 | 150.00 |
| வட்டி மூலம் வருவாய் | 171 | 69.40 | 80.00 | 86.15 | 100.00 |
| இதர வருவாய் | 180 | 2942.50 | 3220.00 | 3257.62 | 3450.00 |
| வைப்புத்தொகை ( கடைகள்) | 340 | 2254.08 | 0.00 | 0.00 | 750.00 |
| நிதி மாற்றம் | 311 | 400.00 | 500.00 | 650.00 | 800.00 |
| மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு | 320 | 4864.03 | 9800.00 | 3563.41 | 7800.00 |
| **மொத்தம்** | | **41181.61** | **48973.50** | **39148.53** | **53550.40** |
| **வரவினம் (மூலதனம்)** | | | | | |
| மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு | 320 | 5973.27 | 22250.00 | 3652.17 | 8260.00 |
| கடன்கள் | 330 | 0.00 | 2000.00 | 0.00 | 2000.00 |
| **மொத்தம்** | | **5973.27** | **24250.00** | **3652.17** | **10260.00** |
| **மொத்த வரவினம்** | | **47154.88** | **73223.50** | **42800.70** | **63810.40** |
| **ஆரம்ப இருப்பு + மொத்த வரவினம்** | | **57944.78** | **73223.50** | **52270.79** | **63810.40** |

## வரவு செலவுத் திட்டம்
## 2025 - 2026
### பொது நிதி
### வரவினம் மற்றும் செலவினச் சுருக்கம்

ரூபாய் இலட்சத்தில்

| கணக்கு விளக்கம் | முக்கிய குறியீடு | உள்ளபடி வரவு-செலவு (2023-24) | திட்ட மதிப்பீடு (2024-25) | திருத்திய திட்ட மதிப்பீடு (2024-25) | திட்ட மதிப்பீடு (2025-26) |
|---|---|---|---|---|---|
| **செலவினம் (வருவாய்)** | | | | | |
| நிறுவனச் செலவுகள் | 210 | 14911.62 | 16300.00 | 16303.99 | 15866.50 |
| நிர்வாகச் செலவுகள் | 220 | 571.40 | 1426.00 | 1120.00 | 1251.50 |
| இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 230 | 7109.52 | 10821.00 | 9693.72 | 9761.00 |
| வட்டி மற்றும் நிதிச் செலவுகள் / முதலீடுகள் | 240 | 90.57 | 802.00 | 42.97 | 52.00 |
| திட்டச் செலவுகள் | 250 | 150.00 | 500.00 | 0.00 | 500.00 |
| மானியம் மற்றும் சகாயத் தொகை | 260 | 1149.15 | 1560.00 | 42.16 | 1310.00 |
| நிதி மாற்றம் ( குடிநீர் நிதி ) | 290 | 3200.00 | 4000.00 | 4200.00 | 5000.00 |
| இதர பொறுப்புகள் | 350 | 596.60 | 2300.00 | 768.06 | 2628.00 |
| **மொத்தம்** | | **27778.86** | **37709.00** | **32170.90** | **36369.00** |
| **செலவினம் (மூலதனம்)** | | | | | |
| கடன்கள் திரும்ப செலுத்துதல் | 330 | 5363.64 | 6400.00 | 3565.36 | 4130.00 |
| நிலையான சொத்துக்கள் | 410 | 24802.28 | 29407.50 | 16534.53 | 23613.35 |
| **மொத்தம்** | | **30165.92** | **35807.50** | **20099.89** | **27743.35** |
| **மொத்த செலவினம்** | | **57944.78** | **73516.50** | **52270.79** | **64112.35** |
| **உபரி / பற்றாக்குறை** | | | **-293.00** | | **-301.95** |

## வரவு செலவுத் திட்டம்
## 2024 - 2025
### பொது நிதி

ரூபாய் இலட்சத்தில்

| கணக்கு குறியீடு | முக்கிய குறியீடு | கணக்கு விளக்கம் | உள்ளபடி வரவு-செலவு (2023-24) | திட்ட மதிப்பீடு (2024-25) | திருத்திய திட்ட மதிப்பீடு (2024-25) | திட்ட மதிப்பீடு (2025-26) |
|---|---|---|---|---|---|---|
| **வரவினம் (வருவாய்)** | | | | | | |
| **வரி வருவாய்** | | | | | | |
| 91-110-01-01 | 110 | சொத்து வரி – குடியிருப்பு | 1960.83 | 2798.80 | 2725.24 | 3200.00 |
| 91-431-10-06 | 110 | சொத்து வரி வசூலிக்கத்தக்கது குடியிருப்பு நிலுவை | 533.75 | 983.70 | 886.15 | 1285.00 |
| 91-110-01-03 | 110 | சொத்து வரி – நிறுவனங்கள் | 374.88 | 535.00 | 502.73 | 660.00 |
| 91-431-10-08 | 110 | சொத்து வரி வசூலிக்கத்தக்கது நிறுவனங்கள் நிலுவை | 102.04 | 188.00 | 175.18 | 204.00 |
| 91-110-01-02 | 110 | சொத்து வரி – வணிகம் | 547.87 | 782.00 | 766.76 | 866.00 |
| 91-431-10-07 | 110 | சொத்து வரி வசூலிக்கத்தக்கது வணிகம் நிலுவை | 149.13 | 275.00 | 220.57 | 380.00 |
| 91-110-01-04 | 110 | சொத்து வரி – காலியிடம் | 36.73 | 75.00 | 36.95 | 80.00 |
| 91-431-10-09 | 110 | சொத்து வரி வசூலிக்கத்தக்கது காலியிடம் நிலுவை | 91.53 | 80.00 | 95.10 | 100.00 |
| 93-110-01-01 | 110 | விளம்பர வரி | 87.07 | 0.00 | 6.36 | 100.00 |
| | | **மொத்தம் - 110 (1)** | **3883.83** | **5717.50** | **5415.04** | **6875.00** |
| 94-110-10-01 | 110 | தொழில் வரி –நடப்பு | 974.26 | 1150.00 | 1147.00 | 1200.00 |
| 94-431-19-04 | 110 | தொழில் வரி – வசூலிக்கத்தக்கது நிலுவை | 417.52 | 350.00 | 203.00 | 400.00 |
| | | **மொத்தம் - 110(2)** | **1391.78** | **1500.00** | **1350.00** | **1600.00** |
| | | **பெரு மொத்தம் - 110 (1+2)** | **5275.61** | **7217.50** | **6765.04** | **8475.00** |
| **ஒதுக்கப்படும் வருவாய்** | | | | | | |
| 98-120-10-01 | 120 | சொத்து மாற்றங்களுக்குரிய வரி | 1242.45 | 1000.00 | 991.71 | 1200.00 |
| 98-120-10-02 | 120 | கேளிக்கை வரி | 160.29 | 250.00 | 180.60 | 250.00 |
| | | **மொத்தம் - 120** | **1402.74** | **1250.00** | **1172.31** | **1450.00** |

# வரவு செலவுத் திட்டம்
## 2025 - 2026
## பொது நிதி

ரூபாய் இலட்சத்தில்

| கணக்கு குறியீடு | முக்கிய குறியீடு | கணக்கு விளக்கம் | உள்ளபடி வரவு-செலவு (2023-24) | திட்ட மதிப்பீடு (2024-25) | திருத்திய திட்ட மதிப்பீடு (2024-25) | திட்ட மதிப்பீடு (2025-26) |
|---|---|---|---|---|---|---|
| **குத்தகை மற்றும் வாடகை வருவாயினங்கள்** | | | | | | |
| 83-130-10-06 | 130 | பேருந்து நிலைய கட்டணம் | 83.54 | 250.00 | 76.32 | 300.00 |
| 58-130-10-01 | 130 | வணிக வளாகங்கள் மற்றும் சந்தைகள் - வாடகை | 535.56 | 800.00 | 824.15 | 900.00 |
| 58-130-10-02 | 130 | சமுதாயக் கூடம்- வாடகை | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 58-130-10-03 | 130 | சந்தைக் கட்டணம் - தினசரி சந்தை | 1130.93 | 400.00 | 1210.45 | 1400.00 |
| 58-130-10-04 | 130 | சந்தைக் கட்டணம் - வாரச் சந்தைகள் மற்றும் ஆண்டு குத்தகை | 66.12 | 200.00 | 95.18 | 220.00 |
| 83-130-10-07 | 130 | வண்டிப்பேட்டை / லாரி மார்கெட் / வாடகை கார்கள் நிறுத்துமிடக் கட்டணம் | 207.11 | 100.00 | 232.13 | 250.00 |
| 61-130-10-08 | 130 | சாலையோர மரங்கள் மூலம் வரவு | 0.99 | 2.00 | 1.18 | 2.00 |
| 06-130-20-01 | 130 | கட்டிட வாடகை | 30.45 | 35.00 | 31.90 | 40.00 |
| 06-130-30-02 | 130 | தங்கும் விடுதிகளுக்கான கட்டணம் | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 06-130-40-01 | 130 | நில வாடகை மற்றும் குத்தகைக் கட்டணம் | 13.50 | 30.00 | 18.15 | 35.00 |
| 42-130-80-05 | 130 | கட்டணக் கழிப்பிடங்கள் கட்டணம் | 205.84 | 200.00 | 231.66 | 250.00 |
| 83-130-80-03 | 130 | வாகனங்கள் நிறுத்துமிடக் கட்டணம் | 2.60 | 3.00 | 2.96 | 33.20 |
| 90-130-80-07 | 130 | கேபிள் டி.வி, கண்ணாடி இழை கேபிள் கட்டணம் | 121.62 | 350.00 | 168.14 | 350.00 |
| 58-431-40-08 | 130 | சந்தைக் கட்டணம்-தினசரி சந்தை வசூலிக்கப்படவேண்டிய நிலுவை | 66.37 | 40.00 | 72.69 | 100.00 |
| 06-431-40-01 | 130 | வணிக வளாகங்கள் மற்றும் சந்தைகள் - வாடகை - நிலுவை | 289.79 | 60.00 | 310.82 | 350.00 |
| 06-431-40-02 | 130 | மீன் மார்கெட் | 18.00 | 20.00 | 21.10 | 25.00 |
| 06-431-40-03 | 130 | மற்றவை | 75.96 | 0.00 | 93.60 | 125.00 |
| | | **மொத்தம் - 130** | **2848.38** | **2490.00** | **3390.43** | **4380.20** |

## வரவு செலவுத் திட்டம்
## 2025 - 2026
### பொது நிதி

ரூபாய் இலட்சத்தில்

| கணக்கு குறியீடு | முக்கிய குறியீடு | கணக்கு விளக்கம் | உள்ளபடி வரவு-செலவு (2023-24) | திட்ட மதிப்பீடு (2024-25) | திருத்திய திட்ட மதிப்பீடு (2024-25) | திட்ட மதிப்பீடு (2025-26) |
|---|---|---|---|---|---|---|
| **சேவைக் கட்டணம் மற்றும் இதர கட்டணம்** | | | | | | |
| 02-140-20-01 | 140 | மறுக்கப்பட்ட காசோலைகளுக்கான அபராதக் கட்டணம் | 4.34 | 5.00 | 475 | 5.20 |
| 02-140-80-03 | 140 | பல்வகை பிடித்தங்கள் | 193.45 | 250.00 | 220.18 | 300.00 |
| 02-140-13-01 | 140 | நகல்களுக்கான விண்ணப்பக் கட்டணம் | 26.84 | 50.00 | 29.18 | 55.00 |
| 02-140-40-07 | 140 | இதரக் கட்டணம் | 38.19 | 60.00 | 43.65 | 65.00 |
| 21-140-70-01 | 140 | சாலைகளில் வெட்டப்பட்ட குழிகளை சீரமைத்தல் கட்டணம் | 421.25 | 700.00 | 536.19 | 750.00 |
| 30-140-11-01 | 140 | தொழில் உரிமக் கட்டணம் | 66.21 | 70.00 | 97.08 | 125.00 |
| 37-140-13-02 | 140 | பிறப்பு மற்றும் இறப்பு படிவங்கள் விற்பனை | 5.13 | 8.00 | 6.15 | 8.50 |
| 45-140-11-04 | 140 | ஆடு அறுவை கட்டணம் | 2.36 | 80.00 | 3.95 | 85.00 |
| 42-140-50-06 | 140 | கழிவுநீர் தொட்டி சுத்தம் செய்யும் கட்டணம் | 0.38 | 70.00 | 0.69 | 90.00 |
| 61-140-60-01 | 140 | தோட்டம், பூங்காக்கள் மூலம் வரவு | 7.12 | 150.00 | 8.90 | 150.00 |
| 90-140-60-04 | 140 | நூலக வரி வரவினம் (10% நூலக வரி மீதான வசூல்) | 858.00 | 900.00 | 936.00 | 1170.00 |
